பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மார்கழி 14 | 29 - 12 - 94 | வியாழக்கிழமை | ஓசை 314

## ஆசிரியர் இடமாற்றம் குறித்து சிபார்சுகள் அரசுக்கு சமர்ப்பிப்பு

ஆசிரியர்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்ற வேண்டிய ஆகக்கூடுதலான காலத்தையும், ஆகக்குறைந்த காலத்தையும் தீர்மானிக்க வேண்டுமென ஆசிரியர் இடமாற்றக் கொள்கையைத் தயாரிக்கும் குழு அரசிற்கு சிபார்சு செய்துள்ளது. ஆகக்கூடுதலான காலத்தைப் பூர்த்தி செய்ததும் கட்டாயமாக அவ் ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்கப்படவேண்டும் என அந்தக்குழு தெரிவித்துள்ளது. தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக கல்வி உயர்கல்வி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவில் அமைச்சின் இரண்டு மேலதிக செயலாளர்கள், மாகாண கல்வி அமைச்சுக்களின் செயல ளர்கள், இரண்டு கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கியுள்ளனர். ஆசிரியர் இடமாற்றத்தை முற்றாக அரசியல் செல்வாக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதே குழுவின் நோக்கமாகும். கல்வி மாணவரை மையமாகக் கொண்டது எனவே ஆசிரியர் இடமாற்றத்தின்போதும் மாணவர்களின் தேவைக்கு (6 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்கள் அரசால் திகதி குறிப்பிடாது ஒத்திவைப்பு

## ஐலண்ட் நாளிதழ் தெரிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான இரண்டாம்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் கால வரையறையின்றி ஒத்திப்போடப்பட்டுள்ளதாக நேற்றைய "ஐலண்ட்" நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.**

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்களில் விவாதிக்கப்பட வேண்டிய அம்சங்கள் குறித்த அரசின் பரிந்துரைகளுக்கு புலிகள் இதுவரை பதில் தர வில்லை என்பதால் அரசாங்கம் இம்முடிவை எடுத்திருப்பதாக ஐலண்ட் தெரிவித்துள்ளது.

இதேவேளை சடைசியாக கடந்த 20-ம் திகதி விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் அனுப்பி வைத்த கடிதத்திற்கு பதில் கடிதமொன்று தலைவர் பிரபாகரனால் 22-ம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது தெரிந்ததே.

இப் பதில் கடிதத்தில் சமாதானப் பேச்சுக் களினூடாக யுத்தத்தின்மூலங்களை ஆராய்வதற்கு முன்னதாக- யுத்தத்தினால் தமிழ்மக்கள் அடைந்துள்ள பாதிப்புக்கள் பற்றி தீர்வு காணப்பட வேண்டும்.

தமிழ் மக்களது அன்றாட அத்தியாவசியமான பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

பேச்சுக்கள் கட்டம் கட்டமாக நகர்த்தப்பட வேண்டும் போர்நிறுத்தத்திற்கும் சமா ( 6 ஆம் பக்கம் பார்க்க

## பிரிகேடியர் ஜெரிபீரிசுக்கும் தூதுக்குழுவில் இடம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் கலந்துகொள்ள தயாராகும் அரசாங்க தரப்பு தூதுக்குழுவில் பிரிகேடியர் கஞப்பஹனாவுடன் பிரிகேடியர் ஜெரி பீரிசும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்தகவலைஐலண்ட்வெளியிட்டுள்ளது. முன்னர் பிரிகேடியர் கஞபஹனாவின் பெயர் மட்டுமே வெளிவந்தது. தற்போது பிரிகேடியர் ஜெரி பீரிசும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## நான்காம் திகதிக்கு முன் சந்திரிகா நாடு திரும்புவார்

(கொழும்பு)

மாலைதீவுக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 4-ந் திகதிக்கு முன்னதாக நாடு திரும்புவார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனவரி 4-ந் திகதி புதிய வருடத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற இருப்பதால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதற்கு முன் நாடு திரும்புவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெயவர்த்தனாவிற்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர்.ஜெயவர்த்தனாவை அடுத்த மாதம் நான்காம் திகதி நீதிமன்றத்திற்கு ஆஜர் ஆகுமாறு கொழும்பு மேலதிக நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஓய்வு பெற்றபொலிஸ் பரிசோதகர் லக்ஷ்மன் ஜெயம்பதி ராஜபக்ஷவின் சார்பாக சாட்சியம் அளிக்க வருமாறு இவ் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

## தொழில்நுட்ப பாடங்கள் மாற்றி அமைக்க முடிவு

(கொழும்பு)

பாடசாலைகளில்கற்பிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இராணுவத்தின் அடையாள அட்டை

தமிழீழ இளநிலை கல்வித் தேர்வு-94

## பாடசாலை மட்டத்திலான சிறந்த பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் யாழ். மாவட்டத்தில் நடாத்தப்பட்ட தமிழீழ இளநிலைத் தேர்வில் சகல பாடங்களிலும் மிகுதிறன் தேர்ச்சி (8 டி) பெற்ற பாடசாலைகளும் கிடைத்த 8 டி களின் எண்ணிக்கையும் வருமாறு:

| பாடசாலை | எண்ணிக்கை |
|---|---|
| யா. வேம்படி மகளிர் கல்லூரி | 13 |
| யா. யாழ். இந்துக் கல்லூரி | 04 |
| யா. ஹாட்லிக் கல்லூரி | 03 |
| யா. மெதடிஸ்த பெண்கள் உயர்தர. பா. | 03 |
| யா. உடுவில் மகளிர் கல்லூரி | 02 |
| யா. மகாஜனக் கல்லூரி | 02 |
| யா. வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி | 02 |
| யா. புனித பத்திரிசியார் கல்லூரி | 01 |
| யா. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 01 |
| யா. திருக்குடும்ப கன்னியர் ம. ம. வி. | 01 |
| யா. யூனியன் கல்லூரி | 01 |
| யா. வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | 01 |

## மாவட்ட மட்டத்திலான முன்னணி மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் யாழ் மாவட்டத்தில் 8-ம் ஆண்டு மாணவர்களுக்கென நடாத்தப்பட்ட தமிழீழ இளநிலைத்தேர்வு (ஆண்டிறுதித் தேர் வு) பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியது தெரிந்ததே.

இதில் முதல் பத்து இடங்களைப் பெற்ற பாடசாலை மாணவர்களது விபரங்களும், கிடைத்த மொத்த புள்ளிகளும் வருமாறு:

| | புள்ளிகள் |
|---|---|
| யாழ். இந்துக் கல்லூரி | |
| விநாயகமூர்த்தி துஷ்யந்தன் | 723 |
| ஹாட்லிக் கல்லூரி | |
| கணபதிப்பிள்ளை குமணன் | 714 |

| | |
|---|---|
| யாழ். இந்துக் கல்லூரி<br>விநாயகமூர்த்தி துஷ்யந்தன் | 723 |
| ஹாட்லிக் கல்லூரி<br>கணபதிப்பிள்ளை குமணன் | 714 |
| உடுவில் மகளிர் கல்லூரி<br>றோஜித்தா சிவசுப்பிரமணியம் | 697 |
| மகாஜனக் கல்லூரி<br>அனித்தா கனகரட்ணம் | 697 |
| வேம்படி மகளிர் கல்லூரி<br>பத்மப்பிரியா நாகேந்திரன் | 695 |
| மெதடிஸ்த உயர்தர பெண்கள் பா.<br>வைதேகி - வேலாயுதம் | 695 |
| றியூனிசாமியா தேவராஜா | 694 |
| வேம்படி மகளிர் கல்லூரி<br>குமாரிபுஸ்பா இலங்கைநாதன் | 693 |
| மகாஜனக் கல்லூரி<br>பவதாரணி யோகநாதன் | 691 |
| வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி<br>அனுராதா அம்பலவாணர் | 689 |

## பாடரீதியான சில சிறந்த பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால்நடத்தப்பட்ட தமிழீழ இளநிலைத்தேர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறும் சமூகக் கல்வியும் ஆகிய பாடங்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் பற்றிய சில குறிப்புகள்:-

★ மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற யாழ். இந்து மாணவன் வி. துஷ்யந்தன் விஞ்ஞானம்-97, ஆங்கிலம்-100 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், கணிதத்தில் 97புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளார்.

★ வேம்படி மகளிர் கல்லூரி மாணவியொருவர் வரலாறும் சமூகக்கல்வியும் பாடத்தில் 100புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், இதே கல்லூரி மாணவிகள் இருவர் தமிழ் பாடத்தில் 97 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் பெற்றுள்ளனர்

★ யாழ். இந்துக் கல்லூரி மாணவன் ஒருவர் கணிதத்தில்99 புள்ளிகளுடன்முதலிடத்தைபெற்றுள்ளார். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியர் இருவர் 98 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்தை பெற்றுள்ளனர்.

★ பரியோவான் கல்லூரி மாணவர்கள் மூவர் ஆங்கில பாடத்தில் 99 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளனர்.

## ராணுவத்தின் அடையாள அட்டை புலிகள் பயன்படுத்துகின்றனராம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட அல்லது விடுதலைப் புலிகளின் தாக்குதலில் பலியான சிறிலங்கா படையினரின் அடையாள அட்டைகளை பயன்படுத்தி விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் படை அலுவலகங்களுக்குள்ளும் அரசாங்க அலுவலகங்களிற்குள்ளும் பிரவேசிக்க முயல்வது தொடர்பான இரகசிய தகவல்கள் பொலிஸ் விசாரணை பிரிவுக்கும், கூட்டு பாதுகாப்பு பிரிவுக்கும் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து படை அலுவலகங்களின் பாதுகாப்பு மற்றும் அரசாங்கக் கட்டடங்கள் கேந்திர இடங்கள் ஆகியவற்றில் பாதுகாப்பில் ஈடுபட்டிருப்பவர்களின் அடையாள அட்டை மற்றும் சகல ஆவணங்களும் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

இவ்வாறான அடையாள அட்டைகள் குறித்து அவதானமாக இருக்கும்படி பொலிஸ் குற்றத்தடைப் பிரிவு படை ஒருங்கிணைப்புக் குழுவின் விசேட அதிகாரி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## குற்றவாளிகளை பரிமாறும் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையில் குற்றச்செயல் புரிந்த வெளிநாட்டவர்களை அவர்களது சொந்த நாட்டுக்கும் வெளிநாடுகளில் குற்றச் செயல்களை புரிந்த இலங்கையர்களை இங்கும் பரிமாற்றிக் கொள்ள வகை செய்யும் சட்டமூலமொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுளது.

இதன்படி அமைச்சர் ஒருவரின் வேண்டுகோளின் கீழ் குற்றவாளிகளை ஏனைய நாடுகளுடன் பரிமாறிக் கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது.

இச் சட்டம் அமுலுக்கு வந்தபின் இலங்கையிலுள்ள சிறைச்சாலையில் இருக்கும் வெளிநாட்டு குற்றவாளி ஒருவரை அமைச்சரொருவரின் அனுமதியுடன் சிறைச்சாலை ஆணையாளர் ஊடாக தங்கள் சொந்த நாட்டுக்கு கொண்டு செல்லமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## 1993/94 பல்கலை. கல்வியாண்டு வெற்றிடங்களுக்கு மாணவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழகத்திற்கு 1993/94 கல்வி ஆண்டிற்கு மேலதிகமான மாணவர்களை அனுமதிப்பதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் என சுமார் நூறு மாணவர்களின் பெயர்ப்பட்டியல் நேற்று வந்துசேர்ந்துள்ளது என பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இந் நூறு மாணவர்களும் மருத்துவபீடம், பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், வர்த்தகம், கலை ஆகிய துறைகளிற்கு அனுமதிக்கப்படவுள்ளனர். இது தொடர்பான பெயர்ப்பட்டியல் பல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்டு நேற்று யாழ். பல்கலைக் கழகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

இம் மாணவர்கள் 1992-ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் தோற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ, பா)

(கொழும்பு)

பாடசாலைகளில்கற்பிக்கப்படும்தொழினுட்ப - தொழில் முன்னிலைப்பாட நெறிகள் மாற்றியமைக்கப்படவுள்ளன.

பாடசாலைகளை விட்டு விலகும் மாணவர்களுக்கு தொழில்வாய்ப்பை வழங்கும் நோக்குடன் இவ்வாறு பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கம்பியூட்டர்விஞ்ஞானம், சிவில் விஞ்ஞான தொழினுட்பம், தங்க ஆபரண நகை தொழினுட்பம் ஆகிய பாடநெறிகள் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

## மூதூர் இறங்குதுறைப் பகுதி காவலரண் முற்றாக அழிப்பு

### இரண்டு இராணுவத்தினர் பலி

(திருகோணமலை)

மூதூர் இறங்குதுறைப்பகுதியில் இறங்குதுறையை காவல் காப்பதற்காக அமைக்கப்பட்ட காவலரண்மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இரவு 11.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின்போது காவலரண் முற்றாக விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் இல்லை.

இதேவேளை இத் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாகியதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

## தாதியர் வேலைநிறுத்தம் ஒருவாரம் ஒத்திவைப்பு

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவந்த அரசாங்க தாதிமார்கள் நேற்றிலிருந்து ஒரு வார காலத்துக்கு தங்கள் வேலைநிறுத்தத்தை ஒத்திவைத்துள்ளனர்.

தாதிமார்களது பிரச்சினை பற்றி ஆராய அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுவை அடுத்த மாதம் பன்னிரண்டாம் திகதி சந்திக்கப் போவதாகவும் தாதிமார் சங்கத் தலைவர் நேற்று அறிவித்தார்.

## மாணவருக்கு விடுதி வசதி துணைவேந்தர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு ஆகக் குறைந்தது அறுநூறு மாணவர்களுக்கு விடுதிவசதி அமைத்துத்தருமாறு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

ஏற்கனவே இருநூறு மாணவர்களுக்கான விடுதிவசதிகளை வழங்குவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்ட போதும் அதற்கான பணத்தை இன்னும் வழங்கவில்லை என்றும்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

### சிங்கர் தையல் இயந்திரங்கள்

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி கிளிநொச்சியில் எமதுசேவையை ஆரம்பிக்கின்றோம் புதிய பழைய தையல் இயந்திரங்கள் உதிரிப்பாகங்கள்திருத்த வேலைகள் அனைத்திற்கும் சிங்கர் தையல் இயந்திர நிலையம், கிளிநொச்சி. (10512)

### தவறிவிட்டது

23-12-94 8.30 மணியளவில் நல்லூரில் (கிளாலி) ரக்ரரில் பிரயாணம் செய்யும் பொழுது தவறவிடப்பட்ட அடையாள அட்டை இல:- 685062216V - ம் பெறுமதிவாய்ந்த பொருட்களும் கண்டெடுத்தவர்கள் திரும்ப ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: சோபிதா பல்பொருள் நிலையம் 395, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (10517]

### சோ. கண்ணாகுருக்கள்

வேதாரிணியம் தியாகராஜக் குருக்களின் மகனாகிய கண்ணாக்குருக்களால் ஈமக்கிரியைச் சடங்குகள், அந்தியேட்டிக் கிரியைச் சடங்குகள் சிறப்பாக நிறைவேற்றப்படும் விபரங்கட்கு: சோ. கண்ணா குருக்கள் இல. 105. சிவன் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (10525)

### பால் விற்பனை

எமது சங்கத்திற்கு திருநெல்வேலி சந்தையை அண்டிய பகுதியில் பால் மற்றும் உபபொருட்கள் விற்பனை செய்வதற்கு முகவர் தேவை விரும்புபவர்கள் கீழ்க் காண் முகவரியில் தொடர்பு கொள்ளவும். பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (11037)

### கண்டெடுப்பு

பி. அரசரட்ணம் என்பவரது ஓய்வூதிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## தஞ்சை தமிழ் மாநாட்டிற்கு தொண்டாதலைமையில்குழு

(கொழும்பு)

தஞ்சாவூரில் ஜனவரி முதலாம் திகதி முதல் ஐந்து நாட்கள் நடைபெறும் 8 ஆவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு சிறிலங்கா அரசின் சார்பாக அமைச்சர் தொண்டமான் தலைமையிலான குழு ஒன்று கலந்து கொள்ளவுள்ளது.

இக்குழுவினரிடம் ஜனாதிபதி சந்திரிகா விசேட செய்தி ஒன்றையும் கொடுத்தனுப்பவுள்ளார். இச்செய்தி அமைச்சர் தொண்டமானினால் தஞ்சாவூர் மாநாட்டில் வாசிக்கப்படும்.

## பொய் தகவல் அளித்தார் குற்றப்பணம் அறவீடு

(தென்மராட்சி)

காவல்துறைப் பணிமனையில் பொய் முறைப்பாடு செய்தவருக்கு சாவகச்சேரி நீதிமன்று குற்றப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளித்தது.

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த நபர் ஒருவர், இன்னொருவரை பழிவாங்கும் நோக்குடன் தனக்கு 30,000 ரூபா தரவேண்டும் என பளை காவல்துறையில் பொய் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து இருவரையும் அழைத்து காவல் துறையினர் நடத்திய விசாரணையின் போது முறைப்பாடு செய்த இவர் பொய் முறைப்பாடு கொடுத்தார் என காவல்துறையினர் மன்றில் முற்படுத்தினர்.

இவ் வழக்கினை விசாரித்த நீதியாளர் திரு. சுடர் குற்றவாளிக்கு பொய் முறைப்பாடு கொடுத்ததிற்கு 3,000 ரூபா குற்றப்பணம் கட்டும் படியும் தவறின் 120 நாட்கள் கட்டாய சமூக சேவை எனவும் தீர்ப்பளித்தார். (86)

## வயிற்றோட்டம் குழந்தை மரணம்

வயிற்றோட்டம், காய்ச்சலினால் 9 மாத குழந்தை மரணமானது.

கொடிகாமம் பருத்தித்துறை வீதியைச்சேர்ந்த பரஞ்சோதி அசோக்குமார் என்ற குழந்தையே இவ்வாறு பரிதாபமாக மரணமானது. ஒரு வாரமாக யாழ் மருத்துவமனையில்சிகிச்சை பெற்றுவந்த இக் குழந்தை மிகவும் கடுமையான வயிற்றோட்டத்தினால் மரணமானது. இது போன்றசிறுகுழந்தைகள்மேற்படி நோயினால் தென்மராட்சிப் பகுதியில் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கோப்பாய் பிரிவு

## பிற்போடப்பட்டுள்ளது

31-12-1994இல்அதிர்ஷ்டம்பார்க்கப்படவிருந்தஅதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 5 - 03 - 1995 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

இ. மயில்வாகனம்
கௌரவ செயலாளர்
(சி-11043)

## பகிரங்க ஏல விற்பனை

### தமிழீழ மாவட்ட நீதிமன்று, பருத்தித்துறை

இம் மன்றில் எதிர் வரும் சனிக்கிழமை 31- 12- 94 அன்று காலை 9.00 மணிக்கு மன்றின் முன்றலில் விறகு. பரல், கத்திகள மற்றும் சில பொருட்கள் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

[சி-11038]


## முகவர் அந்தஸ்து

(கொழும்பு)

தீவடங்கிய ஆறாயிரம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் முகவர் அந்தஸ்து கிடைக்கவுள்ளது.

தனியார்துறையைச்சேர்ந்த ஐயாயிரம் பேரும் முகவர்களாக நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயக மண்ணில்
மலர்வு:
1972.09.24

தாயக மண்ணில்
உதிர்வு:
1992.12.20

### லெப். செந்தூர்ராஜ் / ரகீம்

மயில்வாகனம் கோணேசமூர்த்தி
(கோட்டைக்கல்லாறு, மட்டக்களப்பு)

ஓ மாவீரனே
நீ மடியவில்லை

எங்கள் இதயங்களில் வாழ்கின்றாய்
தானைத்தலைவன் வழியில் வீரனாய் வாழ்ந்தாய்
தமிழீழமண்ணில் மாவீரனாய் மலர்ந்தாய்

இறந்தது உன் உடல்
உயர்ந்தது தமிழர் தம் வீரம்

மயில்வாகனம் நடேசமூர்த்தி
குடும்பத்தினர்.
சகோதரர்கள்.

கிராம முன்னேற்ற சங்க முகாம்
இணுவில் கிழக்கு,
இணுவில். (10522)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
13- 4- 1937

ஆண்டவன் நிழலில்
29- 11- 1994

### திரு. கதிரமலை கந்தசாமி

(கிராம சேவையாளர்)
திதி:- 29- 12- 1994

## சிரமதானங்களினால் மக்கள் அதிக பயன்

மாவீரர் நாளில் 2,36,750 ரூபா பெறுமதியான வேலைகளை சிரமதானம் மூலம் நல்லூர், உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி, கைதடி, கொடிகாமம், பளை, சாவகச்சேரி, தீவக கோட்டம் ஆகிய பகுதிகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக்குழுப் பகுதி செய்துள்ளது வீதிகள், குளங்கள், வாய்க்கால்கள் புனரமைத்தல், வீதியோரங்கள் பராமரிப்பு சேமக்காலைகள் மயானங்கள் துப்புரவு செய்தல் போன்ற வேலைகளுடன் பனம் விதைகள் நாட்டுதல் என்பனவே சிரமதானம் மூலம் செய்யப்பட்ட வேலைகளாகும், இவற்றினை கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர்களும், பொதுமக்களும் இணைந்து செய்தனர். இதனால் மக்களும் விவசாயிகளும் அதிக பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நினைவு கூருகின்றோம்...

### 29.12.1994

1985-ம் ஆண்டு இதேதினத்தில் கிளி-இரணைமடுக்குளம் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**அன்சார்** (கனகரத்தினம் தெய்வேந்திரராசா - வட்டக்கச்சி-கிளிநொச்சி)

1986-ம் ஆண்டு பரந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். கிறிஸ்ரி** (சீனித்தேவன் பேச்சிமுத்து - வண்ணார்பண்ணை-யாழ்)

**ஜக்சன்** (சிவபுண்ணியம் ஜெயச்சந்திரன் - வதிரி கரவெட்டி வடக்கு-யாழ்)

1988-ம் ஆண்டு மட்டு-சேனையூர் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் ரவி** (வடிவேல் நாகேஸ்வரன் - சேனையூர் யாழ்)

1991-ம் ஆண்டு திருமலை-கல்லிமுத்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**அருளன்-செல்டன்** (கணபதிப்பிள்ளை பால்ராஜ் திருமலை)

**புகழேந்தி-கலீல்** (ஜோஜ் நிக்சன் - சீனன்குடா-திருமலை)

**சிவமணி-தியாகு** (வேலாயுதம் ரவிச்சந்திரன் - மூதூர்-திருமலை)

**அறிவழகன்-தீசன்** (இராசரட்ணம் சத்தியமோகன்-புல்மோட்டை-திருமலை)

மட்டு-கொக்குவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் தாக்கியபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கௌரி** (- - கருவேப்பங்கேணி, மாமங்கம்-மட்டு)

1992-ம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**2ம்லெப். அமலன்** (அருளானந்தம் லிங்கதாசன் யாழ் வீதி-மானிப்பாய்)

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினராலும் இந்தியப் படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்

# தமிழீழ காவல்துறை
# பதவி வெற்றிடங்கள்

ஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃ

**1. எழுதுவினைஞர்கள்**

கல்வித் தகைமை :- க. பொ. த (உயர் தரம்) சித்தி அல்லது க. பொ. த (சாதாரண தரம்) தமிழ்மொழி, கணிதம்/எண்கணிதம் உட்பட ஐந்து திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது :- 20 தொடக்கம் 30 வரை

மேற்படி தகைமையுடைய ஆண் பெண் இருபாலாரும் 02-01-1995 தொடக்கம் 06-01-1995 வரை பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேரில் எழுத்து மூல விண்ணப்பத்துடன் உரிய சான்றிதழ்களுடனும் சமுகம் தரவும்.

**2. சாரதிகள் வாகனம் செலுத்துபவர்)/மெக்கானிக்-இலேசான, பாரமான வாகனங்கள்.**

கல்வித் தகைமை :- 08-ம் வகுப்புக்கு மேல்.
வயது :- 25 தொடக்கம் 40 வரை.
உயரம் :- 5' 6''

அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும் வாகனம் செலுத்தும் அத்தாட்சிப் பத்திரங்களுடனும் 02-01-95 தொடக்கம் 06-01-95 வரை பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

**3. சமையலாளர்கள்**

தகைமைகள் :- சமையல் தொழிலில் குறைந்தது மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
வயது :- 30ற்கு மேல்.

மேற்படி தகைமையுடைய ஆண் சமையலாளர்கள் பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு 02-01-95 தொடக்கம் 06-01-95 வரை நேரில் சமுகம் தரவும்.

நன்றி

''புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்''

(சி-11033)

பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

---

திதி:- 29-12-1994

மெய்யுருகி எமை வளர்த்தாய் மேன்மை கண்டோம்- இந்த
மேதினியில் புகழ் சுமந்தாய் மகிமை கண்டோம்
செய்தொழிலால் சிறப்புற்றாய் செம்மை கண்டோம்- உன்னைத்
தேடிவந்தோர் குறை தீர்த்தாய் தெய்வமானாய்
பெய்த பெருமழையாய்க் கண்ணீர் சொரிந்து - இன்று
பெருந்துன்பம் சூழநின்று தவிக்கின்றோம்
ஐயவுமைக் காணாது அழுகின்றோம் - நீங்கள்
அரனவனின் தாள் சேர இறைஞ்சுகின்றோம்

இவ்வண்ணம்
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(க. கமலாம்பிகை யா- போதனாவைத்தியசாலை)
கொக்குவில் மேற்கு.

(சி-11041)

---

வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்
அல்வாய்

## பதவி வெற்றிடங்கள்

**1. முகாமையாளர்**

தகைமைகள்:

1. இந்து சமயத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
2. அரசாங்க / அரசாங்கக் கூட்டுத்தாபனத்தில் கணக்கியல் தொழிற்பாடுகளில் ஈடுபட்டு ஓய்வுபெற்றவராக இருத்தல் வேண்டும்.
3. வயதெல்லை 21க்கும் 55 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**2. வெளிப்பரிசாதகர்**

தகைமைகள்:

1. இந்து சமயத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
2. முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்

சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

விண்ணப்பங்கள் யாவும் 1995-01-05-ம் திகதிக்குமுன்னர்
தலைவர்,
அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன்கோவில்,
அல்வாய் வடக்கு, அல்வாய்.
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(10527)

பரிபாலனசபை

---

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-11034]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்



திருமதி
**மாணிக்கம் சிவபாய்க்கியம்**

மலர்வு:
18.01.1928

உதிர்வு:
29.11.1994

அன்னாரின் ஈமக்கிரியையில் கலந்து கொண்டு அனுதாபங்களைத் தெரிவித்த யாழ். இந்துவின் சமூகத்தவர்களுக்கும் சமாசம் (கூட்டுறவு வ.மா.) உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

14, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(10529)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



# ஆயுதங்களை ஒப்படைக்க முடியாது ஐ. ஆர். ஏ தலைவர் அறிவிப்பு

(லண்டன்)

பிரிட்டிஷ் அரசுடனான சமாதானப் பேச்சு தொடர்வதற்காக, ஐ. ஆர். ஏ தனது ஆயுதங்களை ஒப்படைக்க மாட்டாது என அதன் அரசியல் பிரிவான சின்பெயினின் தலைவர் ஜெரி அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

ஐரிஷ் போராட்டத்தில் ஆயுதம் கையளிப்பது பாரம் பரியமல்ல அனைவருக்கும் இது தெரியும். அனைவரும் இந் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்வர் என்றும் அடம்ஸ் மேலும் தெரிவித்தார்.

நாம் கடக்க வேண்டிய பெரும் தடைக்கல்லாக இருப்பது சமாதான முயற்சிகளில் பிரிட்டிஷ் அரசு போடும் முட்டுக்கட்டைகள்தான் என்றும் அடம்ஸ் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்மேஜர், ஐ. ஆர். ஏ இரண்டாம் சுற்றுப் பேச்சுகளுக்காக அழைக்கப்பட முன் கெரில்லாக்கள் ஆயுதங்களை கைவிட வேண்டும் எனக்கோரியிருந்தார். இதற்கு பதிலளித்த ஜெரி அடம்ஸ் முதலில் பிரிட்டிஷ் அரசு ஒரு நம்பிக்கை தரும்சூழலைஉருவாக்கட்டும். பின்னர் பேச்சுகளின் போது ஆயுதங்கள் குறித்து பேசலாம் எனக் குறிப்பிட்டார்.

# கலைஞர்களின் ஆற்றல், சக்திமீது எமது தலைவர் நம்பிக்கைகொண்டவர்

## பரிசளிப்பு விழாவில் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

எமது தலைவர் கலைஞர்கள் மீது மிகவும் விருப்புக் கொண்டவர் கலைஞர்களினுடைய ஆற்றல், சக்தி மீது நம்பிக்கை கொண்டவர். இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்டத்தினரால் நடாத்தப்பட்ட 1994 ஆம் ஆண்டு கரும்புலிகள் நாளை ஒட்டிய அரங்க பாரம்பரிய போட்டிகளின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த கலைஞர்களின் ஆற்றல்களின் மூலம் எமது சமுதாயத்தை உயிர்ப்பிக்க வைத்து எமது தேசத்தினுடைய விடிவை நிலைநாட்ட முடியும். தேசத்தில் வாழுகின்ற சமுதாயத்தை ஒரு ஆரோக்கியமான சந்ததியாக வாழவைக்க முடியும் என்பதனாலேயே அவர் கலைஞர்கள் மீது விருப்புக் கொண்டவர் என்றார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி சிறப்புரையாற்றுகையில் இன்று எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே கரும்புலிகளாகச் செல்லுகின்ற அளவிற்கு பெண்களினுடைய சக்தி இருக்கின்றது என்பதனைப் பார்க்கின்ற பொழுது போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கின்ற எமது தலைவரிற்குத் தான் இந்த மண்ணிலே பிறந்திருக்கின்ற ஒவ்வொருவரும் நன்றி கூற கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம், ஏனென்று சொன்னால் காலம் காலமாக அடிமைப்பட்டிருந்த தாய்க் குலத்தைத் தான் இன்று எமது தேசியத் தலைவர் அவர்கள் தட்டி எழுப்பி நீங்கள் செய்யுங்கள் என்று உறுதியோடு கூறி தனது உறுதியான வழிகாட்டலினாலே இந்த போராட்டம் இன்று உலகத்தையே சிந்திக்க வைக்கின்றது. அந்த வகையிலேதான் கரும்புலிகளினுடைய தாக்குதல்கள் எதிரியினுடைய மனோபலத்தை உடைத்து நிற்கிறது என்றார். (இ, பா)

# நாகாகிளர்ச்சியாளர் தாக்கு இந்திய இராணுவ அதிகாரி பலி

(டில்லி)

நாகலாந்தில் நேற்று முன் தினம் மாலை நாகா கிளர்ச்சியாளர்கள் இந்திய இராணுவ ரோந்து அணி மீது நடத்திய தாக்குதலில் இராணுவ கட்டளை அதிகாரி ஒருவர் உட்பட மூன்றுபேர் பலியாகினர்.

இருதரப்பிற்கும் இடையே நடைபெற்ற கடும் மோதலின்போது பட்டாலியன் ஒன்றின் கட்டளை அதிகாரி மற்றும் ஒரு இராணுவ ஜவான், கிளர்ச்சியாளர்ஒருவர் கொல்லப்பட்டனர். இதற்கு பழி வாங்கும் நோக்கில் இந்திய இராணுவத்தினர் இப்பகுதியில் உள்ள கடைத்தொகுதி ஒன்றை தீக்கிரையாக்கினர்.

## காவல்துறை மீட்பு

யாழ்ப்பாணத்தின் சில இடங்களில் திருடர்களால் அபகரிக்கப்பட்ட பல பொருட்கள் தமிழீழ காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளன.

சென்ற மாதம் 13-ம்திகதி யாழ். நாவலர் வீதியில் உள்ள கடையொன்றில் இருந்து திருட்டுப்போன சுமார் 13,800 ரூபா பெறுமதியான நான்கு புகைப்படக்கருவிகள் (கமராக்கள்) மற்றும், 22-ம் திகதி ஆனைக்கோட்டை, பழைய பொலிஸ் நிலையத்தடியில் திருட்டுப் போன 750 ரூபா பெறுமதியான போத்தல்கள், வாளி போன்ற பொருட்களே மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் புகைப்படக் கருவிகள் திருட்டில் சம்பந்தப்பட்ட நபர் தடுப்புக்காவலில் உள்ளதாகவும், மற்றையதிருட்டில் சம்பந்தப்பட்ட நபர் மீதான விசாரணை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது, (22)

# செச்னியா மீது ரஷ்யாவின் எஸ். யூ. விமானங்கள் தாக்குதல்

(மாஸ்கோ)

ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்ற செச்னிய குடியரசின் டுடயேவ்வின் ஆட்சி அகற்றப்படவேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சின் கூறிய சிலமணி நேரத்தினுள் ரஷ்யப்படைகள் செச்னியா மீது விமானத் தாக்குதலை கடுமையாக்கியுள்ளன.

இதில் ரஷ்யாவின் எஸ். யூ. ரக போர் விமானங்கள் ஈடுபட்டுள்ளன.

செச்னியா மீதான விமானத் தாக்குதல் நின்றுவிடும் என ரஷ்ய ஜனாதிபதி கூறிய போதும் விமானத் தாக்குதல் அங்கு தொடர்ந்து நடைபெறுகிறது.

இதேவேளை தொலைக் காட்சியில் உரையாற்றிய ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சின், செச்னியா ரஷ்யாவின் ஒரு பகுதி என்பதால் ரஷ்யப் படைகள் தமது நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க முற்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

செச்னியர்கள் ரஷ்யாவிலிருந்து பிரிந்து செல்வதாக அறிவித்ததைத் தொடர்ந்து கடந்த 11ஆம் திகதி சுமார் 40 ஆயிரம் ரஷ்ய துருப்புகள் செச்னியா அனுப்பப்பட்டது தெரிந்ததே.

# உலகின் மிகச்சிறிய றோபோ தயாரிப்பு

## ஜப்பான் சாதனை

(ரோக்கியோ)

உலகின் மிகச்சிறிய இயந்திர மனிதனை ஜப்பானிய நிறுவனமொன்று தயாரித்துள்ளது.

ஒரு சோயாவிதையினது பருமனைக்கொண்ட இந்த றோபோவை மேற்படி ஜப்பானிய நிறுவனம் உருவாக்கி நியூ என்று பெயரிட்டுள்ளது.

சிறியது அல்லது இளமை பொருந்தியது என்பது ஜப்பானிய மொழியில் இதன் அர்த்தமாகும். இதன் மீது ஒளிபாய்ச்சப்பட்டதும் ஒளிவரும் திசையை நோக்கி இது நகர்ந்து செல்லவல்லது.

இன்னும் ஐந்தில் ஒருபங்கு சிறிய றோபோவை தயாரிக்கவும் மேற்படி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

# விஞ்ஞான அறிவியலுக்கு ஏற்ப தமிழை வளர்க்க முயன்றவர்

## எம். ஜி. ஆர் நினைவுரையில் குணராசா

(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழியை விஞ்ஞான அறிவியலுக்கு ஏற்ற வகையில் வளர்த்தெடுக்க பாடுபட்டவர் மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் எம். ஜி ஆர் என பிரதேச செயலர் கலாநிதி க குணராசா தெரிவித்தார்.

மக்கள் திலகம் டாக்டர் எம். ஜி. ஆரின் ஏழாம் ஆண்டு நினைவு தினம் கடந்த திங்கள் மாலை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திறந்த வெளி அரங்கில் நடைபெற்றது.

அனைத்துலக எம் ஜி. ஆர் பேரவைத் தலைவர் பொன். மதிமுகராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து உரைநிகழ்த்திய அவர், எம் ஜி. ஆர் அவர்கள் தமது தனித்துவத்தைப்பாதுகாத்துக் கொள்வதற்கு மொழிப்பற்று, இனப்பற்று என்பவற்றுடன் தமிழ் தேசியப்பற்றும் தேவை என்பதை உணர்த்தினார் என்றார்.

இந்நிகழ்வில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வேலாயுதம் விரிவுரையாளர் சிவமகாலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர் இதனை அடுத்து கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

# பெண்மீது தாக்குதல் நபருக்கு குற்றப்பணம்

## பருத்தித்துறை நீதிமன்று அறவீடு

(வடமராட்சி)

ஒரு பெண்ணை அதே இடத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் அடித்துக் காயப்படுத்திய குற்றத்திற்காக பருத்தித்துறை நீதிமன்ற நீதியாளர் பிரதீபா இரண்டாயிரம் ரூபா குற்றப்பணமும் காயப்பட்டவருக்கு நஷ்ட ஈடாக 1500 ரூபாவும் செலுத்துமாறு கட்டளையிட்டார்.

வல்வெட்டித்துறை காவல் துறையினர் இவ்வழக்கை பருத்தித்துறை நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

தொண்டமனாறு கெருடாவிலைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டது. குற்றத்தைப் புரிந்த ஆண் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்துமேற்படி தண்டனை வழங்கப்பட்டது.

# உணர்வுகளைப் பாதிக்கும் பேச்சுகளுக்கு தடை

## தேர்தல் ஆணையாளர் சேஷன் நடவடிக்கை

(டில்லி)

களின் அறிக்கைகள் இக்குழு

# பல்கலைக்கழக ஆய்வுகூட பொருட்கள் பற்றாக்குறை

6-ம் ஆண்டில்

ஈழநாதம்

மாணவர்களுக்கான

கட்டுரைப் போட்டி

ஈழநாதம் மக்கள் தினசரி தனது ஆறாம்

## தேர்தல் ஆணையாளர் சேஷன் நடவடிக்கை

(டில்லி)

தேர்தல்களின்போது அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் குறுகிய நோக்கில் உணர்ச்சிகளை பாதிக்கக் கூடிய விடயங்களை தவறாக பயன்படுத்துவதை தவிர்க்க கண்காணிப்பு குழு ஒன்றை நியமிக்க இந்திய தேர்தல் ஆணையாளர் டி.என்.சேஷன் முடிவு செய்துள்ளார்.

வேட்பாளர் மற்றும் சட்சிகளின் அறிக்கைகள் இக்குழுவால் பரிசீலிக்கப்படும். மதம், இனம், வகுப்பு, மொழி எனும் அடிப்படையில் ஆதரவு திரட்டும் எம்முயற்சியும் இக்குழுவால் அவதானிக்கப்படும் இவற்றை மீறும் கட்சி, வேட்பாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவசியமாயின் தேர்தலும் ரத்தாகலாம் என்றும் சேஷன் எச்சரித்துள்ளார்.


### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். கோட்டம்

### பொதுசபை கூட்ட அறிவித்தல்

எதிர்வரும் 30-12-94 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு புதிய விஞ்ஞான கல்வி நிலையத்தில் நடைபெறும்.

★ வெள்ளிக்கிழமை மாலை நேரவகுப்புக்கள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளது.

தலைவர்
(யாழ். கோட்டம்)

(சி-11030)



### தமிழீழ சட்ட நூல்களை பெற்றுக் கொள்ளும் இடம்

நீதி நிர்வாகத்துறையினரால் வெளியிடப்பட்ட தமிழீழ ஒறுப்புச் (தண்டனை) சட்டம் மற்றும் இதர சட்ட நூல்களையும்

தமிழ்த்தாய் பொத்தக சாலையிலும்
பூபாலசிங்கம் பொத்தக சாலையிலும்

பெற்றுக்கொள்ளலாம்.

(சி-11032)


## பொருட்கள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தின் ஆய்வு கூடத்திற்கு தேவையான பொருட்கள் பெரும் பற்றாக்குறையாகவுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

இப்பற்றாக் குறையைநிவர்த்தி செய்யும் முகமாக கொழும்பில் இருந்து இப் பொருட்களை எடுத்துவருவதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டும் பாதுகாப்புதலைமைச் செயலகம் அனுமதி மறுத்துள்ளது.

இவ்வாறானநிலை தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில்யாழ் பல்கலைக் கழகத்தின் இரசாயன, பௌதிகதுறைகள் கல்வி சம்பந்தமான பெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

இத்துறைகளின் ஆய்வு கூடத்திற்கு தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதில் பல்கலைக்கழகம் தொடர்ந்தும் கடும் முயற்சி எடுத்து வருகிறது இவ்வாறு யாழ் பல்கலைக்கழக பதிவாளர் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்

(இ) (நி) (பா)

## மட்டக்களப்பில் இன்னமும் 3620 பேர் அகதிகள் முகாமில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்னமும் 876 குடும்பங்களைச் சேர்ந்த 3620 பேர் அகதிமுகாம்களில் இருப்பதாக அம்மாவட்ட அரச அதிபர் ஏ.கே.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறையை சேர்ந்த 32 குடும்பங்களை சேர்ந்த 116 பேர் கல்லடி நெசவு நிலையத்தில் தங்கியுள்ளனர் ஏறாவூரை சேர்ந்த 436 குடும்பங்களின் 1770 பேர் சித்தாண்டி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, சாகிராகல்லூரி, நெல் சந்தைப்படுத்தல் சபை கட்டடம் என்பவற்றில் தங்கியுள்ளனர்.

வாழைச்சேனையைச் சேர்ந்த 388 குடும்பங்களின் 1647 பேர் பேத்தாழை அகதி முகாமிலும் போரதீவுப்பற்று பகுதியை சேர்ந்த 20 குடும்பங்களின் 95 பேர் மண்டூர் அகதி முகாமிலும் தங்கியுள்ளனர்.

## பல்கலைக்கழகத்திற்கு மண்ணெய் எடுத்துவர பெரும் இழுபறி நிலை

யாழ். பல்கலைக்கழகத்திற்கு தேவையான மண்ணெண்ணையை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு பெரும் இழுபறி நிலையை எதிர் நோக்க வேண்டிய நிலையில் யாழ் பல்கலைக் கழகம் உள்ளது.

அடுத்த தடவை பல்கலைக்கழகத்திற்குத் தேவையான மண்ணெண்ணையை கொழும்பில் இருந்து நேரடியாக பெற்றுக் கொள்ளுமாறு யாழ் அரச அதிபர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் பல்கலைக் கழகத்திற்குத் தேவையான மண்ணெண்ணையை எடுப்பதற்காக கொழும்பிற்கு சென்ற பல்கலைக்கழக உத்தியோகத்தர்களிற்கு மண்ணெண்ணைக்கான அனுமதியை வழங்க கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் மறுத்துள்ளது.

அத்துடன் பல்கலைக்கழகத்திற்குத் தேவையான மண்ணெண்ணையை யாழ் அரச அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு கூட்டுப்படை தலைமை அலுவலக அதிகாரிகள் பல்கலைக்கழக உத்தியோகத்தரிடம் கூறியுள்ளனர்.

இந் நிலையில் யாழ் பல்கலைக்கழகம் தமக்குத் தேவையான மண்ணெண்ணையைப் பெற்றுக் கொள்வதில் என்ன செய்வதென்று தெரியாததொருஇக்கட்டான நிலையில் உள்ளதாக யாழ் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## திருட்டு நபருக்கு சிறைத்தண்டனை

(தென்மராட்சி)

கிளாலியூடாக பயணம் செய்த பெண்மணியிடம் தோட்டை திருடிய நபருக்கு சாவகச்சேரி நீதி மன்று சிறைத் தண்டனையை வழங்கியது.

4000 ரூபா பெறுமதியான தங்க நகைத் தோட்டினை கடந்தமாதம் கிளாலி பஸ்சில் வைத்து முளங்காவில் வினாயகபுரத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் திருடினார் என சாவகச்சேரி நீதிமன்றில் பளை காவல் துறையினர் திருடியவரை முற்படுத்தினர்.

இவ்வழக்கினை விசாரித்த நீதியாளர் திரு. சுடர் குற்றவாளி குற்றத்தினை ஒப்புக் கொண்டதின் பேரிலும் அவரின் குடும்ப நிலையினை கருத்தில் கொண்டும் 2 மாத கால சிறைத்தண்டனையை வழங்கினார். (86)


ஈழநாதம் மக்கள் தினசரி தனது ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதையொட்டி பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த முன்வந்துள்ளது.

### தலைப்பு:

''எமது சமூகத்தின் தேவைகளை இன்றைய கல்வி பூர்த்தி செய்கின்றதா''?

### போட்டி விதிகள்:

- கட்டுரைகள் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.
- கட்டுரையாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்படுவதுடன் கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும் கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பொறுப்பு வாய்ந்த ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1995 ஜனவரி 31ஆம் திகதிக்கு பிந்தாயல் ஈழநாதம் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது
- போட்டி முடிவுகள் 17-2-1995 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்
- இப்போட்டியில் முதலாவது பரிசு பெறும் கட்டுரை ஆறாம் ஆண்டுவிழா மலரில் பிரசுரிக்கப்படும்
- முதல் மூன்று இடங்களையும் பெறும் கட்டுரைகளுக்கு ஆறாம் ஆண்டின் ஆரம்ப நாளில் சிறப்பு பரிசில்கள் வழங்கப்படும்.
- கட்டுரைகள் அனைத்தும் 'ஈழநாதம்ஆறாம்ஆண்டு போட்டி' எனகடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு;

ஆசிரியர்

**ஈழநாதம்**

31, மகேந்திரா விதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

# கனடிய ஆடை தயாரிப்பு நிறுவனம் சிறிலங்காவிலிருந்து வெளியேறும்?

(கொழும்பு)

பன்னலவில் இயங்கி வந்த கனடிய ஆடைதயாரிப்பு நிறுவனமொன்றான சௌத் ரெக்ஸ்ரைல் லங்கா பிரைவேட் லிமிடெட் தனது தொழிற்சாலையைசிறிலங்காவில் இருந்து பர்மாவுக்கு மாற்றப் போவதாக அறிவித்துள்ளது.

இந் நிறுவனத்தின் சிறிலங்கா கிளையின் முகாமையாளரான தமிழர் ஒருவர் ஊழியர்களால் தாக்கப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து இம் முடிவுக்கு வந்துள்ளதாக நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் தொழில் ஆணையாளருக்கு தெரிவித்துள்ளார்.

40மில் லியன் அமெரிக்க டொலர் செலவில் அமைக்கப்பட்ட இந்நிறுவனம் நாளாந்தம் 70,000அமெரிக்க டொலர்களை இழந்து வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இடமாற்ற கடிதங்கள்

(தென்மராட்சி)

கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறும் சாவகச்சேரிக் கல்விக் கோட்டத்தைச் சார்ந்த ஆசிரியர்களுக்கான பாடசாலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எனவே சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கல்விக் கோட்ட அலுவலகத்திற்கு நாளை வெள்ளிக்கிழமை சமுகமளித்து இடமாற்ற கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு சாவகச்சேரி கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (86)

# வாரத்தின் நான்கு தினங்கள் திரைப்படம் ஒளிபரப்ப தடை

## கொழும்பு தனியார் தொலைக்காட்சிகளுக்கு விதிப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒரு மாதத்திற்கு நான்கு படங்களுக்கு மேல் திரையிடக் கூடாதென தகவல் தொடர்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று தகவல் தொடர்பு அமைச்சின் செயலாளர் லயனல் பெர்ணாண்டோ, தொலைக்காட்சி நிறுவன உரிமையாளர்களையும், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரிகளையும் சந்தித்தபோது இப்பணிப்பை விடுத்துள்ளார்.

வெள்ளி, சனி, ஞாயிறு திங்கட்கிழமைகளில் திரைப்படங்களை தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் திரையிடுவது தடை செய்யப்படுவதாகவும் எதிர்வரும் ஜனவரி முதல் வராத்திலிருந்து இது நடைமுறைக்கு வருமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட எம்.டி வி நிறுவன உயரதிகாரி, இவ்வாறான சட்டதிட்டங்களால் தங்களது தொலைக்காட்சி ஒளிபரப்புக்களை நிறுத்த வேண்டி ஏற்படலாம் என லயனல் பெர்ணாண்டோவுக்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாப்பரசர் பாதுகாப்பிற்கு 13 ஆயிரம் பொலிசார்

(கொழும்பு)

பாப்பரசரின் வருகைக்காக பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிக்கவென பதின்மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பொலிசார் கட்டுநாயக்காவிலும் கொழும்பிலும் விசேட கடமைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில், சுமார் ஐயாயிரம் பொலிசார் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் கடமைக்கு அழைக்கப்பட்டிருப்பதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அதிபர் மெரில் குணரட்ண பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வை செய்வாரெனவும், பொலிசாரோடு இராணுவம் மற்றும் கடற்படையினரும் தேசிய புலனாய்வுப் பிரிவும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாப்பரசரோடு 52 பத்திரிகையாளர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் வருவார்களெனவும் ஜனவரி 20-ந் திகதி பி. ப. 3 மணிக்கு பாப்பரசரின் விமானம் கட்டுநாயக்காவில் தரையிறங்குமெனவும் கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

# ஒப்பந்தங்கள் செய்வதில் ஐ.தே.கவின் ஜெட் வேகம்

## ஒருவாரத்தில் 200க்கு மேல் கைச்சாத்து

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்குப் பின்னர் ஐ.தே.க. ஆட்சியினால் இருநூற்றுக்கு மேற்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளதாகவும் அவற்றை ரத்துச் செய்வதற்கான நடவடிக்கையில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டங்களில் 66 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாகவும் பின்னர் மேலும் 150 ஒப்பந்தங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆகஸ்ட் 10ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் 25 நிமிடங்களில் 119 கேள்விப் பத்திரங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சமாதானப் பேச்சுக்களில் விட்டுக்கொடுப்பு அவசியம்

## சமாதான ஊக்குவிப்பு குழு தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களின் போது விட்டுக்கொடுக்கும் கொள்கை முக்கியமானது என சமாதான பேச்சுகளை ஊக்குவிக்க அமைக்கப்பட்ட குழுவின் நேற்றைய முதல் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இரு தரப்புமோ அல்லது ஒரு தரப்போ தமது நிலைப்பாட்டிலிருந்து விட்டுக்கொடுக்காவிட்டால் பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது என நேற்று பம்பலப்பிட்டி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி குழுவின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இணையமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் குமாரசாமி வினோதன் தலைமையில் இக்குழு கடந்தவாரம் அமைக்கப்பட்டிருந்தது.

சமாதானம் உருவாக தாக்குதல் நிறுத்தப்படவேண்டும் என்றும். தரைப்பாதை ஒன்று உடனடியாக திறக்கப்பட வேண்டும் எனவும் கூட்டத்தில் பேசிய இக்குழுவின் தலைவர் குமாரசாமி வினோதன் தெரிவித்தார்.

# புதுடில்லியில் உள்ள சிறிலங்கா தூதுவரின் இருப்பிடம் மோசமாம்

(கொழும்பு)

இந்தியாவிற்கான சிறிலங்காவின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள மங்கள முனசிங்காவிற்கு இராஜதந்திர ரீதியிலான பிரச்சினை ஏதும் இதுவரை தோன்றாவிடினும் அவருக்கான இருப்பிட வசதி பெரும் பிரச்சினையாக உள்ளது என சண்டே ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

சிறிலங்கா தூதரகம் அருகே இராஜதந்திரிகள் தங்கும் கட்டிடம் வெகு மோசமான நிலையில் இருப்பதாகவும் அண்மையில் இதன் கூரைப்பகுதி ஒன்று இராஜதந்திரி ஒருவரின் தலையில் வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா தூதுவரின் அலுவலகமும் உடைந்த சுவர்களாகவும் வர்ணங்கள் உரிந்த நிலையிலும் காணப்படுகிறது என கூறப்படுகிறது.

# நாணய மாற்று மோசடி; மூன்று இலங்கையர் கைது

(கொழும்பு)

முதலீட்டுச் சபைத் திட்டங்களில் ஈடுபட்டுள்ள சில வெளிநாட்டுப் பிரஜைகள் தொடர்புபட்ட மற்றுமொரு நாணய மாற்று மோசடி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது இவர்கள் இலங்கையர்களின் ஒத்துழைப்புடன் இலங்கை உல்லாசப்பயண சபையின் அனுமதி பத்திரத்தின் சிறுமண்டிச் ... த்தி வந்துள்ளனர்.

இந்த வர்த்தக முயற்சிகள் மூலம் பெறப்படும் உள்ளூர்ப் பணம் வெளிநாட்டு நாணயங்களாக மாற்றப்பட்டு நாட்டுக்கு வெளியே கடத்திச் செல்லப்படுகின்றன. நீர்கொழும்பு பொலிசார் பல சோதனைகளை நடாத்தி இச்சட்டவிரோத வர்த்தக நடவடிக்

# பெறுமதியான முத்திரை நேரடியாகவிண்ணப்பிக்குக

## பிரதி அஞ்சல் நாயகம் கோரிக்கை

(வடமராட்சி)

தொகை கூடிய முத்திரைகளை தபால் அதிபர்கள் தாமே நேரடியாக சம்பந்தப் ... களையும் சாதாரண முத்திரைகள் பெறுவது போல் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளும் வகையில் நடவடிக்கை

# கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த 90-ம் ஆண்டிலிருந்து காணாமற் போன பலரது அடையாள அட்டைகள் எமது பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:

சிதம்பரம் நாகமணி(நெடுந்தீவு மேற்கு), மீனலோசினி சுப்பிரமணியம் (புங்குடுதீவு மேற்கு), புவனேஸ்வரி செல்லத்துரை (நீர்வேலி), கணபதிப் பிள்ளை பஞ்சரத்தினம் [வண்ணார்பண்ணை], மாணிக்கம் தம்பிராசா [கட்டைபறிச்சான்], ராசலிங்கம் தெய்வானைப் பிள்ளை (..னித்தீவு மூதூர்), பொன்னழகு மீனம்மா [பிலிஹுடுகொல்ல] சிவகுருநாதர் புஸ்பலதா [பருத். வீதி, நல்லூர்], சின்னத்தம்பி கனகம்மா [சிறுப்பிட்டி], ஏ. எம். பாக்கியநாதர் [வளலாய் மேற்கு], பரமேஸ்வரி குணரத்தினம் [தெல்லிப்பளை கிழக்கு], நவதேவராணி காசிநாதர் [மந்துவில்,சாவகச்சேரி], ரூபன் ரவீந்திரா நிர்மலா [சீனிவாசகம் வீதி யாழ்ப்பாணம்), கந்தையா சின்னம்மா [கோவில்குளம், ஆசிகுளம்] சின்னத்தம்பி கனகம்மா (சிறுப்பிட்டி), பூமணி முத்துலிங்கம் (வட்டு - கிழக்கு) பரமேஸ்வரி வேலுப்பிள்ளை (சாவகச்சேரி வடக்கு), ஜோசப் ஜெயநாதன் பிடோலின் (ஏழாலை மத்தி),நன்னி சின்னக்குட்டி (புத்தூர் மேற்கு), கணபதிப்பிள்ளை வசந்தராணி (கரவெட்டி கிழக்கு), கணேசரட்ணம் சுமந்தினி(மூளாய் தெற்கு மூளாய்) மங்கையற்கரசி தர்மலிங்கம் (உடுப்பிட்டி), மேசி சசிகலா குணரத்தினம் (1-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்), மனோன்மணி குலசிங்கம் (வட்டு-கிழக்கு), இராமச்சந்திரன் தங்கமுத்து (சிங்கநகர்), கந்தையா ...வில் மேற்கு), கிரகரி கார்மெலா (மவுண்காமல் வீதி குருநகர்), நாகலட்சுமி ஆறுமுகம் (வேலணை கிழக்கு), செல்வராணி சிவசுப்பிரமணியம் (காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்), கண்மணி துரைராசா (காரைநகர் மேற்கு), சீனித்தம்பி செல்வலட்சுமி [புன்னாலைக் கட்டுவன் வடக்கு], தங்கலட்சுமி புண்ணியமூர்த்தி [புங்குடுதீவு மேற்கு], கந்தையா கௌரி [புகையிரத நிலைய வீதி,சுன்னாகம்] குலசிங்கம் குலதேவசந்திரிகா [நெல்லியடி, கரவெட்டி], தங்கராசா சறோஜினிதேவி [டச்வீதி கண்டிலிப்பாய்] ஜோகேஸ்வரி சிவகுரு நாதன் [பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம்], கிருபா கிருஷ்ணசாமி [கரணவாய் தெற்கு கரவெட்டி], மனோன்மணி சிவரத்தினம் [அராலி, வடக்கு], றோகினி ஆறுமுகநாதர் [யாழ். பல்கலைக்கழகம்], எஸ். யாழினி [இராமநாதன் கல்லூரி], ஆள்வார்பிள்ளை சிவகுமார் [கரவெட்டி], தம்பிராசா வசந்தகுமார் [உடுப்பிட்டி], தில்லைநாதன்[வசாவிளான்] ஆர். வீரசாமி [லங்கா சீமெந்து தொழிற்சாலை], யோகரட்ணம் வீரக்குமார் [மன்னார்], தாமோதரம்பிள்ளை ஞானசுந்தரம்[கொக்குவில்], நீலன்வைரமுத்து [கோண்டாவில்], இளையதம்பி சுப்பிரமணியம் [திருக்கடலூர் திருமலை], சபாரத்தினம் ஓம்சிவானந்தம் [தும்பளை றோட் புலோலி), செபஸ்தி நட்சத்திரம் (3-ம் வட்டாரம் சரவணை மேற்கு), சுவாமிநாதன் சிவனேசன் (3-ம்வட்டாரம்அல்லைப்பிட்டி), சுப்பிரமணியம் துரைராசா(காரைநகர் கிழக்கு), பாலசுந்தரம் சிலுவை நேசன் (கட்டுடை மானிப்பாய்), கதிரைவேலன் [பெரியவிளான்], சண்முகம் மகாலிங்கம்[ ஊரி, காரைநகர்], பெருமாள் பொன்னையா [யரோத் தோட்டம், புபுலெஸ்ஸ] கனகசுந்தரம் விக்னேஸ்வரமூர்த்தி [கனக..புரம்,கிளிநொச்சி] வைத்திலிங்கம் பிரபாகரன் (8-ம் வட்டாரம்- மண்டைதீவு], கந்தையா சின்னப்பொடியன் [கைதடி] கே. ஜெயகுமார் [சென்.சேவியர் ஆண்கள் ம.ம.வி. அடையாள அட்டை. மன்னார்] சுப்பிரமணியம் சிவநாதன் [1-ம் குறுக்குவீதி, காங்கேசன்துறை] அருணன் இராமச்சந்திரன் [வட்டுக் கோட்டை], எமிலியானுஸ் பிள்ளை ஜோசேப் ஜெயநாதன் [ஏழாலைமத்தி, ஏழாலை], ..ரகன் கந்தப்பு [மணற்பாதி, கர...வாய் கிழக்கு. கரவெட்டி], எஸ். புஷ்பகாந்தன் [Saudi Operation and Maintco அடையாள அட்டை]

சின்னக்குட்டி சின்னத்துரை [பளை, வீமன்காமம்], சுப்பிரமணியம் நவரத்தினசாமி [துறையூர் வேலணை கிழக்கு], சின்னத்தம்பி இராசையா (பொலிஸ் நிலையம் வவுனியா), துரைரத்தினம் கெங்கேஸ்வரன் [ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்], சுந்தரலிங்கம் சாந்தலிங்கம் [கோப்பாய் தெற்கு], வல்லிபுரம் சுப்பிரமணியம் [தெல்லிப்பழை], ஜோசப் சேவியர் [பாலம்பிட்டி], சின்னத்தம்பி ஈஸ்வரகுமார் [அரசகேசரி பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி தெற்கு], நாகலிங்கம் இராசன் [உருத்திரபுரம்], கணபதி மயில்வாகனம் [புலோலி], பிச்சை ஜெயராமன் (றோபேரிய, பிட்டாமானுவ), சின்னையா புவனேந்திரன் [தட்டாதெரு, புலோலி கிழக்கு], செல்லத்துரை ...

ப்புடன் இலங்கை உல்லாசப் பயண சபையின் அனுமதிப் பத்திரத்துடன் சிற்றுண்டிச் சாலைகள், சுற்றுலா விடுதிகள், மதுபானச்சாலைகள் மற்றும் உயர்தர சிறுஹோட்டல்கள் ஆகியவற்றை நடாத்தி இச்சட்ட விரோத வர்த்தக நடவடிக்கைகளில் வெளிநாட்டவர்களுக்கு உதவி வந்த மூன்று இலங்கையர்களைக் கைதுசெய்துள்ளனர்.

## உணவு மைய உரிமை கிறிஸ்தவ குழு விற்பனை

(கொழும்பு)

பாப்பரசரின் விஜயத்தின் போது திரளும் மக்களுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்குவதற்கு உதவுப் வகையில், வெளிநாட்டு நிறுவனங்களிடம் உணவு மையங்களுக்கான உரிமைகளை கத்தோலிக்க கிறிஸ்தவ குழுக்க“ விற்பனை செய்து வருகின்றன.

இத்தகவலை பாப்பரசரின் கொழும்பு விஜயத்துக்கான ஏற்பாடுகளை கவனித்து வரும் ஆயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

## விண்ணப்பப் படிவங்களை 31 க்கு முன் சமர்ப்பிக்குக

(தொல்புரம்)

பொதுசனப் பிரநிதித்துவமுடைய அமைப்புக்களை பதிவு செய்வதற்கு தமிழீழ நிர்வாக சேவையினரிடம் இருந்து விண்ணட்பப் படிவம் பெற்ற அனைவரும் படிவங்களை உரியமுறையில் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு நிர்வாக சேவைப் பகுதி தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பதாக மேற்படி படிவங்களை பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் என்பன அல்லாத ஏனைய அமைப்புககளும் தங்கள் அமைப்பின் யாப்புப் பிரதி ஒன்றினையும், சிறிலங்கா அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பின் அவர்களால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் பிரதி ஒன்றினையும் விண்ணப்பத்துடன் இணைத்து ஒப்படைக்குமாறும் தமிழீழ நிர்வாக சேவையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

## துலா முறிந்து வீழ்ந்து வயோதிபர் படுகாயம்

(வடமராட்சி)

கிணற்றில் தண்ணிர் அள்ளிய போது துலா முறிந்து விழுந்ததையடுத்து வயோதிபர் ஒருவர் தலையில் பலத்த காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பொலிகண்டி சமரபாகு என்னும் இடத்தைச் சேர்ந்த வே. தங்கராசா (61) என்பவரே தலையிலும் முகத்திலும் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருபவராவர். (யோ)

தொகை கூடிய முத்திரைகளை தபால் அதிபர்கள் தாமே நேரடியாக சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ள முடியுமென வடபிராந்திய பிரதி அஞ்சல் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் செரிவித்தார்.

வடபிராந்திய தபால் அதிபர்கள் ஆயிரம், ஐந்நூறுரூபா பெறுமதியான முத்திரைகள் பெறுவது போல் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கொழும்புக்குச் சென்றிருந்த பிரதி அஞ்சல் நாயகம், அஞ்சல் நாயகத்தைச் சந்தித்து இதற்காக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருந்தார். (யோ)

## கல்லூரிகளுக்கான விஞ்ஞான போட்டிகள்

### யாழ். விஞ்ஞான சங்கம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்

கல்லூரி மாணவர்களிடையே ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வரும்யாழ். விஞ்ஞான சங்கத்தின் கல்லூரிகளுக்கான விஞ்ஞான நிகழ்ச்சி எதிர்வரும் ஜனவரி 21இல் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும்.

க.பொ.த. உயர்தர மாணவர்கள் பங்குபற்றும் இப்போட்டி வினாவிடை போட்டி, பேச்சுப்போட்டி என இருபிரிவுகளாக நடைபெறும் வினாவிடைப் போட்டிக்காக ஒவ்வொரு கல்லூரியும் தலா பத்து மாணவர்களை தெரிவு செய்து எதிர்வரும் சனிக்கு முன்பாக யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள யாழ் விஞ்ஞான சங்கத்தில் விண்ணப்பக்குப்படி கோரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அனைவருக்குமான எழுத்துப் பரீட்சை ஜனவரி ஏழாம் திகதி நடைபெற்று அதிகூடிய புள்ளிகள் பெறும் முதல்பத்து மாணவர்களுக்கு இறுதி வாய்மொழிப்போட்டி நடைபெறும்.

விஞ்ஞானப் பேச்சுப்போட்டிக்கு ஒரு கல்லூரி ஒரு மாணவரை மட்டும் தெரிவு செய்து ஜனவரி 21இல் யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அனுப்புதல் வேண்டும் என்றும் அவர்களுக்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக தலைப்புகள் வழங்கப்பட்டு ஐந்து நிமிடம் பேச அனுமதிக்கப்படுவர் என்றும்தெரிவிக்கப்படுகிறது.

வெற்றி பெறுபவர்களுக்கான பரிசுகளும், சான்றிதழ்களும் ஏப்பிரலில் நடைபெறும் சங்கத்தின் வருடாந்த கூட்டத்தில் வைத்து வழங்கப்படும்.

---

## மருதங்கேணி பஸ் சேவை

(வடமராட்சி)

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் சிற்றூர்தி சேவைச் சங்கம் மூலம் மருதங்கேணிக்கு பஸ்சேவை ஒன்று ஆரம்பமாகிறது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி சிற்றூர்திச் சேவை சங்கத்தினர் காலை 7 மணிக்குபருத்தித்துறையில் இருந்து மருதங்கேணிக்கும், மாலை 3 மணிக்கு மருதங்கேணியில் இருந்து பருத்தித்துறைக்கும் சேவையை நடாத்தவுள்ளனர். (யோ)

## மாகோவில் தபால் பொதிகள்?

பருத்தித்துறைக்குவரவுள்ள ‘மாகோ’ கப்பலில் தபால் பொதிகள் வந்து சேருமென வடபிராந்திய பிரதி அஞ்சல் நாயகம் திரு. எஸ். எம்.சேதுகாவலர் தெரிவித்தார்.

க்கு), இராமச்சந்திரன் தங்கமுத்து (சிங்கநகர்), கந்தையா மனோன்மணி (3-ம் யூனிற் யோகபுரம்), இராசையா ராஜேஸ்வரி (உரும்பிராய்), குணரத்தினம் கமலராணி (வலி கமுண தெரு எதலை), ஆறுமுகம் ராகினி (காற்றடைப்பு வீதி கே கே.எஸ்), தர்மரட்ணம் புஸ்பலதா [இராமகிருஷ்ணபவன் கல்லடி], தம்பிராசா சுமதி [செபஸ்தியன் வீதி குருநகர்] விஜயலட்சுமி ஆறுமுகசாமி [காங்கேசன் துறை], ரி. வினோதினி [வேம்படி மகளிர் கல்லூரி] தனலட்சுமி டேவிற்பரசம், (தென்னகம) ஜெகராஜா சகாயநாயகி, (கடற்கரைவீதி குருநகர்), புனிதமலர் சிவபாலசிங்கம் (பனிப்புலம் சுழிபுரம்), ஜெயபவானி குணரத்தினம் (பார்மணியம் வீதி, தெல்லிப்பளை), தங்கமுத்து சிவசிதம்பரம் (பெரியவிளான் இளவாலை), தமிழேஸ்வரி ஞானசேகரம் (முத்து கிருஷ்ணர் வீதி சுன்னாகம்), தவரத்தினம் தனலக்சுமி (சாயுடை மாவிட்டபுரம்), சிவஞானேஸ்வரி கனகேஸ்வரன் (மகேசன் வீதி, நவாலி), திலகவதி அருணாசலம் (மீசாலை வடக்கு), கணபதிப்பிள்ளை செல்லம்மா (அன்புவழிபுரம், திருமலை), மாரியாய் சந்தனம் (உள் துறைமுகவீதி), புனிதவதி சதாசிவம் (செட்டித்தெரு, பருத்தித்துறை), பஞ்சலிங்கம் லிங்கதேவி (புங்குடுதீவு மேற்கு), குணபூசணி அம்மா சுப்பிரமணிய ஐயர் (கரணவாய் தெற்கு, கரவெட்டி), நவநீதா புவனேந்திரன் (முத்துச்சாமிலேன், புலோலி கிழக்கு), சின்னம்மா கணபதிப்பிள்ளை (கரணவாய் தெற்கு), கே. மங்கையற்கரசி (நீதிமன்றம் சாவகச்சேரி), சின்னத்தம்பி வதனி (அரியாலை மேற்கு), ஜெயந்தி பரமநாதன் (நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்), கனகம்மா இராசரத்தினம் (அளவெட்டி), செல்லத்துரை ஜெயமாலினி (கேணியடி, கொக்கு

சிலுவை நேசன் (கட்டுடை மானிப்பாய்), கதிரைவேலன் புவனேந்திரன் [ஊரெழு], சிவக்கொழுந்து ஜெயராசா [வண்ணார் பண்ணை], சின்னத்தம்பி துரைராசா [காரைநகர்], கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் [தங்கோடை, காரைநகர்], சிவசம்பு இராசையா], சந்தனப் புளியடி, காரைநகர்], ஞானப்பிரகாகம் அந்தோனிப்பிள்ளை [இளவாலை], பரராசசிங்கம் மோகனதாஸ் [விநாயகபுரம் துணுக்காய்] நோயல் துரைரத்தினம் தேவநாயகம் [கொழும்பு] குழந்தைவேல் சந்திரகுமார் [பருத்தித்துறை] சின்னத்தம்பி பரமசிவம் ]சில்வத்கம - தலகிரியாகம], கதிரிப்பிள்ளை ஞானப்பிரகாசம் [மியாங்குளம்] நகராசா உதயசூரியன் [கொக்குவில்], கணபதிப்பிள்ளை செல்லப்பா [திருகோணமலை], ரங்கசாமி வீராச்சாமி [காங்கேசன் துறை], வைத்தியநாதன் தனாக்கோடி [பாண்டியன் குளம், மூன்று முறிப்பு], வீரவாகு துரைசிங்கம் [உடுப்பிட்டி] இராஜரட்ணம் நாகேந்திரன் [கோட்டைக்கல்லாறு] சின்னப்பா தம்பித்துரை [கொம்பனி வீதி, கொழும்பு], பொன்னுத்துரை காசுமுத்து

புலோலி கிழக்கு], செல்லத்துரை ஜெயசீலன் [பண்ணைவீதி, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை] கந்தன் பழனியாண்டி சிவன் பண்ணைவீதி. யாழ்ப்பாணம்] கதிரவேல் தியாகராசா [கல்வியங்காடு] வைத்திலிங்கம் தர்மலிங்கம் [கொழும்பு], நாராயணமூர்த்தி முருகேசு [கரவெட்டி], விஜயசுந்தரம் சேகரன் ]பண்டகை உடுப்பிட்டி], சந்தாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை [இராசேந்திரம்குளம், பூவரசங்குளம்], சுப்பையா இராசேந்திரன் [உப்புவெளி, திருகோணமலை] கிறிஷ்ணர் பேரம்பலம் [சங்கரத்தை, வட்டுக்கோட்டை, இரத்தினம் விக்னேஸ்வரராசா [மறவன்புலவு சாவகச்சேரி மார்க்கண்டு சிறிரூபன் புங்குடுதீவு] அன்னலிங்கம் சுசீதரன் [புங்குடுதீவு], சுப்பையா செல்லத்துரை [ஜம்பட்டா வீதி, கொழும்பு பழனி கேதவராஸ் [துறையூர் வேலணை கிழக்கு), மதியழகன் பொன்னுத்துரை (புளியடி ஒழுங்கை, கரம்பன்], கந்தசாமி தர்மகுலசிங்கம் (உடுப்பிட்டி],

மேற்குறித்த அடையாள அட்டைகளை உரியவர்கள் விரைவில் பெற்றுக் கொள்ளவும்.

## மின்பிறப்பாக்கி வழங்க கொழும்பில் பின்னடிப்பு

யாழ் பல்கலைக்கழகத்திற்குத் தேவையான மின்பிறப்பாக்கிகளை கொழும்பில் இருந்து கொண்டு வருவதற்கு பாதுகாப்பு தலைமை அலுவலகம் அனுமதி வழங்காது இழுத்தடித்து வருவதாக யாழ் பல்கலைக்கழக பதிவாளர் தெரிவிக்கின்றார்.

யாழ் பல்கலைக்கழகத்தின் சில பிரிவுகளிற்கு மின்சாரம் இன்மையால் பெரும் நெருக்கடிகளை பல்கலைக்கழகம் எதிர்நோக்கியுள்ளது.

இவற்றை நிவர்த்திக்கும் முகமாக பல்கலைக்கழக நிர்வாகம் தேவையான மின்பிறப்பாக்கிகளை கொழும்பில் இருந்து தருவிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. இதற்கு கொழும்பில் உள்ள பாதுகாப்பு தலைமை அலுவலக அதிகாரிகள் அனுமதி வழங்காது தொடர்ந்து இழுத்தடித்து வருகின்றனர்.

இதனால் பல்கலைக்கழகத்தில் மின்சாரம் இன்றி சில பிரிவுகள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக யாழ் பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

(இ) (நி) (பா)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.



**சிந்தனைக்கு..**

உழைக்காமல் ஓய்வு எய்த இயலாது; போரிடாது வெற்றி ஈட்ட முடியாது.

- தோமஸ் ஏ. கெம்பிஸ்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்-05

## பேச்சிற்கும் செயலுக்கும் இடையில்

இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தையில் அரசாங்கம் காட்டும் அக்கறையீனம் குறித்து தமிழ்மக்கள் சலிப்படைந்து வருகின்றனர். இவ்விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் பேச்சிற்கும் செயற்பாட்டிற்கும் இடையில் பெரும் இடைவெளிகள் காணப்படுவதே இதற்குக் காரணமாகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முதல் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த வரை சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகும் எனவும், அரசாங்கம் சமாதானத்தீர்விலேயே அக்கறை உள்ளதாகவும் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றனர்.

இதன் அடிப்படையில் கொழும்பிலிருந்து வெளியாகும் மும்மொழிப் பத்திரிகைகளும்- சிங்களம், தமிழ், ஆங்கிலம்- சமாதானப்பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் எனவும், அதில் பேசப்படவுள்ள விடயங்கள் என ஒரு பட்டியலையும் தொடராக வெளியிட்டு வருகின்றன. அத்தோடு இராணுவத்தின் நிலைப்பாடு குறித்தும் அவை தகவல்களை வெளியிடுகின்றன.

ஆனால் நடைமுறையில் அவ்வாறானதொரு நிலை இருப்பதாகத் தெரியவில்லை. இதற்குச் சிறப்பானஉதாரணமாக விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும்- அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்று வந்த கடிதப்போக்குவரத்தையே காட்ட முடியும். பொதுவாகவே அரசாங்கம் அனுப்பும் கடிதங்களுக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் ஓரிரு தினங்களுக்குள் தமது பதிலை அனுப்பி வைக்க, அரசாங்கம் அனுப்பும் பதில் கடிதங்களோ குறைந்தது ஒருவாரத்திற்கு மேல் செல்வதைக் குறிப்பிடலாம்.

இதனை அரசாங்கம் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்கின்றதா? அல்லது தவிர்க்க முடியாத நிலையில் மேற்கொள்கின்றதா? என்பதற்கு தற்பொழுது பதில் கூற முடியாதுவிட்டாலும் இது அரசாங்கத்தின் அக்கறையீனத்தின் வெளிப்பாடு என்று துணிந்து கூறலாம்.

தென்னிலங்கையில் அதிகரித்திருக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகள், வேலை நிறுத்தங்கள், அரசாங்கத்திற்கும் பெரும் தலைவலியை ...

# இனப் பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு இல்லை

### ஐ. தே. க எம். பி. றொனி டி மெல்

(கொழும்பு)
வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு எந்த காலத்திலும் யுத்தத்தினால் தீர்வுஒன்றை காணமுடியாது. அரசியல் தீர்வே அவசியமானது இந்த கொள்கையில் இருந்து நான் எந்த நிலையிலும் மாறப்போவதில்லை என ஐ.தே.க மாத்தறை மாவட்ட உறுப்பினர் றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

''லங்காதீப'' பத்திரிகைக்கு அளித்தபேட்டியொன்றில் இக் கருத்தை தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் நாட்டின் ஒருமைப்பாட்டையும், இறைமையையும் குந்தகம் செய்யும் நிலையில், இல்லாது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஓர் தீர்வுத் திட்டத்தை கொண்டு வருமாயின் நூற்றுக்கு நூறு வீத ஒத்துழைப்பை வழங்க தான் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

சமஷ்டி முறை தொடர்பாக பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. சமஷ்டி முறையே பல நாடுகளில் இருக்கின்றது. அவை பல வகையான அதிகாரத்தை கொண்டவை. இலங்கையை விட சிறிய நாடான சுவிஸில் கூடசமஷ்டி முறையுள்ளது.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை நான் விரும்பாததால் நாட்டை விட்டு வெளியேறினேன். ஆனால்அமைச்சரவை தீர்மானத்தில் கலந்து கொண்டது உண்மை. அதனால் முழுமையாக ஆதரித்ததாக அதனை கருத முடியாது என தெரிவித்தார்.

நாட்டின் சமாதானத்திற்காகவே அதற்கு உடந்தையாக இருந்தேனே தவிர இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு அல்ல- இதற்கு காமினி திசாநாயக்க முழுமையாகஉடந்தையாய்இருந்ததாகவும் றொனி டி மெல் மேலும் தெரிவித்தார்.

# சுவிஸில் இருந்து திரும்பியவர் கொழும்பில் நிர்க்கதி நிலை

### தனது குடும்பத்தினரின் நிலை அறியமுடியாது அவலம்

(கொழும்பு)
கடந்த நவம்பர் 30 ஆம் திகதி கார்த்திகேசு இரத்தினம் (30) என்பவர் சுவிஸ் நாட்டிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார் இவரின் குடும்பம் குறித்த தகவல் தெரிந்தோர் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அகதிகளுக்கான ஐ நா உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

நுகேகொட ஸ்ரேசன் வீதியில் அமைந்துள்ள, சுவிஸ்நாட்டில் அரசியல் தஞ்சம்கோரி அது நிராகரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டு தங்க வைக்கப்படுவோர் விடுதியில் இவர் தற்போது தங்கியுள்ளார்.

இருவருடங்களுக்குமுன் மாதகல் - சில்லாலைப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்து இவரின் குடும்பம் அங்கிருந்துஇடம் பெயர்ந்துள்ளதாகவும் இவருடனான குடும்பத்தினரின் கடிததொடர்பு துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரின் மனைவி சண்முகராணி என்றும் பிள்ளைகள் ஜெயராஜ், சுருதிராஜ், கடம்பராஜ் என்றும் அறிவிக்கப்படுகிறது.

# புகையிரத நிலைய அதிபர் வேலை நிறுத்த முஸ்தீபு

### ஜனவரி 31 வரை காலக்கெடு

(கொழும்பு)
புகையிரத நிலைய அதிபர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற அரசிற்கு ஜனவரி 31 வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இக்காலப்பகுதியில் கோரிக்கைகள் நிறைவேறாவிடின் புகையிரத நிலைய அதிபர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவர் என எச்சரித்துள்ளனர்.

சம்பள உயர்வுக்கோரிக்கையை ஏற்று அமுல் செய்யுமாறு இவர்கள் அரசை கோரியுள்ளனர்.

# மக்கள் பிரச்சினை ஆராய பலபத்தபெண்டியின் குழு

கொழும்பு)
மக்கள் பிரச்சினைகளை கண்டறிந்துதீர்வுகாண ஜனாதிபதியால் அதிகாரிகள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் பலபத்தபெண்டி தலைமையிலான இக்குழு பல மாவட்டங்களுக்கும் நேரடியாக செல்லும்.

மாவட்டத்தில் பிரச்சினைகளை அணுகி தீர்வுபெற்றுக் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி ஜனவரி முதல் சகல மாவட்ட ... சென்று மக்கள் - அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைகேட்டறிந்துதீர்வுகளை எடுக்கும் என்றும் கூறப்படுகிறது. இக்குழுவால் தீர்வு காண முடியாத பிரச்சினைகள் ஜனாதிபதி கவனத்திற் ...

# அமெரிக்க அஞ்சல் நிலைய ஒப்பந்தசரத்து திருத்தப்படும்

(கொழும்பு)
கடும் சர்ச்சைக்குரியதாக உள்ள இரணவில வொயிஸ் ஒப் அமெரிக்கா அஞ்சல் நிலைய ஒப்பந்தத்தில் சில சரத்துகள் திருத்தப்படவுள்ளன. இதற்கு அமெரிக்க அரசும் இணங்கியுள்ளது.

இப்பகுதியில் மீன்பிடி உரிமைகளும் சமய ஊர்வலங்களும் பூரணமாக மதிக்கப்படும் என்றும் சில சரத்துகள் மாற்றப்படுவதன் மூலம் இதைச்செய்யலாம் என்றும் கொழும்பில் உள்ள அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

இரணவில இடவிஸ்தரிப்பு மேலும் அதிகரிக்கப்படமாட்டாது என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. 409 ஏக்கர் காணியில் உள்ள இந்நிலைய காணி ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணத்திற்கு உபயோகிக்கவும் முன்னர் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. இது தற்போது நீக்கப்படவுள்ளது.

# திடமானகொள்கைஇன்மை பேச்சு தாமதிக்கக் காரணம்

### ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)
இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான திடமான கொள்கையோ யோசனையோ புதிய அரசிடம் இல்லை சமாதான பேச்சுகள் தாமதமடைய இதுவே காரணம். என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகக் கூறியே பொதுஜன ஐக்கிய முன்னணி மக்களிடம் வாக்கு கேட்டது. இதற்காக மக்களின் ஆணையையும் பெற்றது. எனவே தீர்வு யோசனையை பகிரங்கமாக அறிவித்து பேச்சுகளை முன்னெடுக்க வேண்டும்.

அரசின் யோசனை முன்வைக்கப்பட்ட பின் அது எப்படி அமைந்துள்ளது என்பதை தெரிந்து கொண்டபின் ஐ.தே.கவின் நிலைப்பாடு தெரிவிக்கப்படும் என்றும் ரணில் மேலும் தெரிவித்தார்.

# சொத்தி உபாலி சகா சிறையருகே சுடப்பட்டார்

(கொழும்பு)
சொத்தி உபாலிக்கு நெருக்கமானவர் எனக் கூறப்படும் நபர் ஒருவர்வெலிக்கடைசிறைவளாகத்தில் வைத்து சுட்டுக் காயப்படுத்தப்பட்டுள்ளார்.

அஜித் பிரேமதிலக எனப்படும் இவரை நத்தார் அன்று வெலிக்கடை கைதிகளை பார்வையிட வந்த பெருமளவு பொதுமக்கள் மத்தியில் ஒளிந்திருந்த ஒருவர், கழுத்தில் சுட்டுக்காயப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மனைவிக்கு வீசிய குண்டு தானே பலியானார் சிப்பாய்

(கொழும்பு)
தனதுமனைவியுடன் மனஸ்தாபத்திற்குள்ளான இராணுவ சிப்பாய் ஒருவர் ஆத்திரமடைந்து தனது மனைவியை கொல்வதற்காக கைக்குண்டை வெடிக்கச் செய்தபோது பிரஸ்தாப சிப்பாய் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். அவர் மனைவியும் மாமியாரும்ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நான்கு வயது பிள்ளைக்கு தந்தையான இச்சிப்பாய் சம்பவ தினம் தம் மனைவியுடன் மனஸ்தாபப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# அரைகுறை எரிந்தசடலம் ஜிந்துப்பிட்டியில் மீட்பு

(கொழும்பு)
சந்தடி மிக்க ஜிந்துப்பிட்டிப் பகுதியில் அரைகுறை ... யில் கொண்டு வந்து போடப்பட்டு பெற்றோல் ஊற்றி ...

கூற முடியாதுவிட்டாலும் இது அரசாங்கத்தின் அக்கறையீனத்தின் வெளிப்பாடு என்று துணிந்து கூறலாம்.

தென்னிலங்கையில் அதிகரித்திருக்கும் தொழிற் சங்க நடவடிக்கைகள், வேலை நிறுத்தங்கள், அரசாங்கத்திற்கும் பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மைதான். இதனை எதிர்த்தரப்பு தமது அரசியல் ஆதாயத்திற்குப் பயன்படுத்தவும் கூடும். ஆனால் இனப்பிரச்சினை என்பது அவற்றைவிட எந்த அளவிலும் குறைந்ததல்ல. சற்று ஆழமாகப் பார்த்தால் மற்றைய சகல பிரச்சினைகளுக்கு அடிப்படையானதும் கூட.

இந்நிலையில் இனப்பிரச்சினை தீர்வைப் பற்றிச் சிந்திக்க அரசாங்கத்திற்கு நேரம் ஒதுக்க முடியாமல் உள்ளது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதொரு வாதமல்ல. அது திட்டமிட்ட புறக்கணிப்பு அல்லது அக்கறையீனம் என்றே கொள்ள முடியும். அதிலும் குறிப்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த யாழ். செல்லவிருந்த குழுவுடன் கலந்துரையாட ஜனாதிபதிக்கு நேரம் ஒதுக்க முடியாது போய்விட்டது என்பது விசனத்திற்குரிய தொன்றாகும்.

ஏனெனில் தற்பொழுது கிடைக்கும் தகவல்களின்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா 10 நாள் விடுமுறையில் உள்ளார். இவர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தமது விடுமுறையைக் கழித்ததாக / கழிப்பதாகத் தெரிகின்றது. நாட்டைச் சுட்டெரிக்கும் ஒரு பிரச்சினையைப்பற்றிப் பேச சில மணி நேரம் ஒதுக்க முடியாத நிலையில் நாட்டின் தலைவர் விடுமுறையில் இருப்பதென்பது அவர் இவ்விடயத்தில் காட்டும் புறக்கணிப்பையே வெளிப்படுத்துவதாகக் கருத இடமுண்டு.

இதேசமயம் ஜனாதிபதி நாட்டில் இல்லாமையானது சமாதானப் பேச்சுவார்த்தையின் இரண்டாவது கட்டம் விரைவில் நடைபெறும் என வெளியாகிக் கொண்டிருக்கும் செய்திகளைக் கேள்விக்குரியதாக்குகின்றன. அவ்வாறு தான் விரைவில்நடைபெறுமானாலும், அவற்றில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படுமா என்பதும் சந்தேகமானதே. எடுத்துக்காட்டாக முப்படைகளின் தளபதியான ஜனாதிபதியின்றி போர் நிறுத்தம் தொடர்பான முடிவொன்றை எடுக்க முடியுமா? என்பது முக்கியமான வினாவாகும்.

இந்த வகையில் சந்திரிகா அரசாங்கத்தின் செயற்பாடுகள் அன்றாடம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கும் தமிழ்மக்களுக்கு திருப்தி அளிப்பதாக இல்லை. கடந்த காலத்திலும் சிங்கள மக்களின் பிரச்சினைகளே பிரச்சினைகள், தமிழ் மக்களின் பிரச்சினைகள் பிரச்சினையில்லை என்ற ஆட்சியாளர்களின் நிலைப்பாடே, இனப்பிரச்சினை இன்று இந்த நிலையை அடைவதற்குக் காரணமாகும். இதனைச் சந்திரிகா அரசாங்கமும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

திபதியால் அதிகாரிகள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் பலபத்தபெண்டி தலைமையிலான இக்குழு பல மாவட்களை அணுகி தீர்வுபெற்றுக் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி ஜனவரி முதல் சகல மாவட்ட செயலகங்களுக்கும் இக்குழு எடுக்கும் என்றும் கூறப்படுகிறது. இக்குழுவால் தீர்வு காண முடியாத பிரச்சினைகள் ஜனாதிபதி கவனத்திற்கு எடுத்துவரப்படும்.

# தேசிய உளவு பணியகம் பொலிஸ் மா அதிபரின் கீழ்வரும்

தற்போது மீளமைக்கப்பட்டுவரும் தேசிய உளவுப் பணியகம் (என்.ஐ.பி.) அடுத்த வருடம் முதல் பொலிஸ் மா அதிபரின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச உளவறியும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படும் தேசிய உளவுப் பணியகம் தற்போது பாதுகாப்பு அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கி வருகிறது. தற்போது விசேட பொலிஸ் பிரிவு கட்டடத்தில் இயங்கி வரும் தேசிய உளவுப் பணியகம், விரைவில் வேறு கட்டடம் ஒன்றிற்கு மாற்றப்படும். பாதுகாப்பு இணைப்பு பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் தேசிய உளவுப் பணியகத்தில் இனி கடமையாற்றுவர்.

இதன் தரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## மாடு திருடியவரிடம் குற்றப்பணம் அறவீடு

(வடமராட்சி)

மாடு திருடிய மூவர் வல்வெட்டித்துறை காவல்துறையினரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

அம்பனையைச் சேர்ந்த ஒருவரது மூன்று மாடுகளை திருடிய துன்னாலை வேம்படியைச் சேர்ந்த மூவருக்கு எதிராக வல்வெட்டித்துறை காவல்துறையினர் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

மாடு திருடிய மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால், இவர்களுக்கு நீதியாளர் பிரதீபா தலா ஆயிரம் ரூபா குற்றப்பணம் கட்டுமாறு தீர்ப்பு வழங்கினார். (யோ)

## மண்டைதீவு கடலில் திடீர் சுழல் காற்று

### மீன்பிடி படகு மூழ்கியது

(குருநகர்)

கடந்த திங்களன்று மண்டைதீவு கடற்பகுதியில் திடீரென ஏற்பட்ட சுழல் காற்றினால் குருநகரை சேர்ந்த மீன்பிடி வள்ளம் ஒன்று சுழியில் சிக்கி மூழ்கியது. அச்சம் காரணமாக ஏனைய மீனவர்கள் தொழிலைக் கைவிட்டு திரும்பினர்.

இது பற்றி தெரியவருவதாவது, இக்கடற்பரப்பில் திடீரென சிறியளவில் ஏற்பட்ட சுழல் காற்று காரணமாக கடலில் சுழிஏற்பட்டது. இதில் ஒரு படகு சிக்கி மூழ்கிய போதும் படகிலிருந்த மூன்று மீனவர்களும் சாதுரியமாக நீந்தி கரைவந்து சேர்ந்தனர். இதைத்தொடர்ந்து ஏனையவர்களும் கரை திரும்பி விட்டனர்.

பின்னர் காற்றுவேகம் குறைந்ததும் மூழ்கிய வள்ளத்தை மீட்கச் சென்றவர்களை நோக்கி மண்டைதீவு படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத்தொடர்ந்து மீட்பு முயற்சி கைவிடப்பட்டது.



## கிராமியப் பாசறை

கைதடி நாவற்குழி தெற்கு மறவன் புலோவில் இன்று காலை 8-10 மணிக்கு மாதாந்த கிராமியப் பாசறை நிகழ்வு இடம்பெறவுள்ளது. காலை சிரமதான நிகழ்வும், இரவு கருத்துரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## மக்களுக்காகவே கலை படைக்கப்படவேண்டும்

நல்ல ஒரு கலைஞன் கலைப் பணிக்கு எப்போதும் ஆயத்தமாகவே இருப்பான். எமது சமூகத்தின் தேவையை அறிந்து அதனோடு இணைந்து உருவாக்கும்ஆக்கங்களே நல்ல கலைப்படைப்பாக அமையும்.

இவ்வாறு கடந்த திங்கள் தொல்புரத்தில் நடைபெற்ற சங்கானைவட்ட செஞ்சுடர் கலைக்கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடுவகப்பணியக கலை பண்பாட்டுக் கழக நிகழ்வுப் பொறுப்பாளர் திரு. வளநாடான் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

தொடர்ந்துஅவர் அங்குஉரையாற்றுகையில் கலை கலைக்காகவல்லாமல் மக்களுக்காகவேபடைக்கப்படவேண்டும். இதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு இந்த தேசத்தின் இறைமையை கலைபண்பாட்டுப் பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவரினதும் கடமையுமாகும். அதன் இறைமைக்கான வழிநடத்தலை கொண்டு செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு இந்த கலைஞர்களுக்கு உரித்தானது இந்தவகையில் செஞ்சுடர் கலைக்கழகம் தனது கலைப்பணிகளை மக்கள் மத்தியில் செவ்வனே நடாத்தி வருவதை என்னால் காண முடிகிறது. தொடர்ந்தும்எதிர்வரும் காலங்களில் இக்கழகத்தின் ஊடாக பல கலைஞர்கள் உருவாகவேண்டும் என தெரிவித்தார்

(கொழும்பு)

சந்தடி மிக்க ஜிந்துப்பிட்டிப் பகுதியில் அரைகுறையாக எரிக்கப்பட்ட ஆண் சடலம் ஒன்று, கடந்த ஞாயிறன்று மீட்கப்பட்டது. 40 வயதுடைய இவர்வேறோர்இடத்தில் கொல்லப்பட்டு இப்பகுதியில் கொண்டுவந்து போடப்பட்டு பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டிருக்கலாம் என பொலிசார் தெரிவிக்கின்றனர்.

ஜிந்துப்பிட்டி சனசமூக நிலையமருகே இச்சடலம் காணப்பட்டது.

## தொற்று நீக்கு கருவி மீள எடுத்து வரப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனைக்கு கப்பலில் எடுத்து வரப்பட்டு இறக்கமுடியாத நிலையில் மீளகொண்டு செல்லப்பட்ட தொற்றுநீக்கும் கருவி மீண்டும் விரைவில் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயர் தொழில் நுட்பம் உடைய இச்சாதனம் அண்மையில் கப்பலில் கொண்டுவரப்பட்டு இறக்கப்பட இருந்த சமயம் கடல்கொந்தளிப்பு காரணமாக அது மீண்டும் கொண்டுசெல்லப்பட்டுவிட்டது கடல்நிலை சீரானதும் இச்சாதனம் எடுத்துவரப்படவுள்ளது. (சி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 12. 29**
**வியாழன் இரவு**

08. 01 - சொல்லுங்கள் பார்க்கலாம்
08. 10 - சித்தமருத்துவக் குறிப்புகள்
08. 20 உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் ''நவத்தார் குடும்பம்'' குறு நாடகம்.
08 30 - செய்திகள்
08. 40 - ஏட்டிலிருந்து நாடகம், நாட்டாரியற் சிந்தனைகள் என்ற நூலிலிருந்து ''ஈழத்துக் கூத்து மரபு'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்.
08. 50 - மலரும் மொட்டுக்கள்.
09. 00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994. 12. 30**
**வெள்ளி காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - மணியாரம்
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப் பாடல்கள்
08. 00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# 10 பல்துறைகலைஞர்களுக்கு விருது வழங்கி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மஞ்சவனப் பதி முருகன் ஆலயத் திறந்த வெளி அரங்கில் கடந்த 26-ம் திகதி நடைபெற்ற அமரர் மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் 7-வது ஆண்டு நிறைவு விழாவில் 10 பல்துறைக் கலைஞர்களுக்கு விருது (பட்டம்) வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விருதுகளை அனைத்துலக எம். ஜி. ஆர் பேரவையின் தலைவர் பொன் மதிமுகராசா வழங்கினார்.

''லயஞானபூபதி''- பி. பழனிவேற்பிள்ளை (தவில்) ''வில்லிசை வேந்தன்''- எஸ். வடிவேல் (வில்லிசை); ''ஸ்வர ஞானபூபதி''- எம். எஸ். சண்முகநாதன் (நாதஸ்வரம்); ''அறப்பணிச் சக்கரவர்த்தி''- க. கனகராஜா, ''மெல்லிசைச் சக்கரவர்த்தி''- மு. கோபாலகிருஷ்ணன் (கண்ணன்); ''உலோகக் கலைமாமணி''- இ. கெங்காதரன்; ''நடிகமாமணி''- இரா. பற்குணம்; ''கானாமிர்ததிலகம்''- மு. வர்ணகுலசிங்கம்; ''ஓவியக்கலைச் செம்மல்''- பெ. சுப்பிரமணியம்; ''சிற்பவாணர்''- சி. அமரசிங்கம் ஆகியோருக்கே பட்டங்கள் வழங்கப்பட்டன.

# வட அல்ஜீரிய நகரில் நான்கு மதகுருமார் படுகொலை

## விமான கடத்தல் முறியடிப்பின் எதிரொலி?

வட அல்ஜீரிய நகரமான ரிஷிஅசோமுக்கு சமீபமாக நான்கு ரோமன் கத்தோலிக்க மதகுருமார் நேற்றுமுன்தினம் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ரோமாபுரியிலுள்ள சிரேஷ்ட அதிகாரியான பிதா டெனிஸ் பமலின் இந்தப் படுகொலைகளை ஊர்ஜிதம் செய்து மதகுருமாரின் இல்லத்திலேயே இவை இடம் பெற்றுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

அல்ஜீரியஸ் நகரத்திலிருந்து நூறுகிலோ மீற்றர் கிழக்கில் உள்ள ரிஷிஅசோமில் மூன்று மதகுருமார் தங்கியிருந்தனர் எனவும் மற்றொருவர் இவர்களைச் சந்திப்பதற்கு சென்றிருந்தார் என்றும் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட எயர்பஸ் விமானத்திலிருந்த நான்கு முஸ்லிம் கெரில்லாக்களையும் பிரெஞ்சு கொமாண்டோக்கள் கொலைசெய்து விமானத்திலிருந்தவர்களை விடுவித்த 24 மணி நேரத்திற்குள் நான்கு ரோமன் கத்தோலிக்க மதகுருமாரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இறந்த மதகுருக்களில் மூவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் மற்றவர் பெல்ஜியத்தைச் சேர்ந்தவரெனவும் தெரியவருகிறது.

இதேவேளை அல்ஜீரிய முஸ்லிம் தீவிரவாதிகள், வெளிநாட்டவர்கள் அனைவரும் தமது நாட்டைவிட்டு வெளியேறிவிடவேண்டும் எனவும் இல்லையேல் மரணத்தை சந்திக்கவேண்டியிருக்கும் எனவும் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இதற்கிடையில் கடத்தப்பட்ட எயர்பஸ் விமானத்தில் வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக பிரான்ஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர். விமானத்தில் ஆசனங்களுக்குக்கீழ் இவ் வெடிகுண்டுகளை கண்டுபிடித்ததாக பிரான்ஸ் உள்துறை அமைச்சர் கூறினார்.

கடத்தல்காரர்கள் தற்கொலை முயற்சியை மேற்கொண்டார்கள் எனவும் பாரிஸிற்கு மேலே விமானம் செல்லும்போது அதை தகர்க்க அவர்கள் திட்டமிட்டிருக்கலாம் எனவும் அவர் கூறினார். அத்துடன் தற்போது அச்சுறுத்தல் காரணமாக பிரான்ஸில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# மரண அறிவித்தல்கள்



## அமரர் முத்தையா திருநாவுக்கரசு
(S. L. A. S., B. A)

(உதவித் தேர்தல் ஆணையாளர், புத்தளம்)

ஊர்காவற்றுறை தம்பாட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பருத்தித்துறை ஐயனார் வீதியில் வசித்தவருமான முத்தையா திருநாவுக்கரசு (உதவித் தேர்தல் ஆணையாளர், புத்தளம்) 26 12-94-ல் அமரத்துவம் அடைந்துள்ளார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று 28-12-94 அன்று பருத்தித்துறையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
இ. பார்த்திபன்
(மகன்)

ஐயனார் வீதி;
பருத்தித்துறை.

(9872)

# அம்பாறை மாவட்டத்தில் 'அஷ்ரப்' பெயரில் கிராமம்

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்த இடங்களில் முஸ்லிம் மக்கள் குடியமர்த்தப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அஷ்ரப் கிராமம் என்ற பெயரில் மாதிரிக் கிராமமொன்று ஆயிரம் ஏக்கர் பரப்பில் முஸ்லிம் மக்களுக்கென அடிப்படை வசதிகள் பலவற்றோடு அமைக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# நெதர்லாந்துக்கு இலங்கைத் தமிழரை அழைத்துச்சென்ற ஐவர் மீது வழக்கு

(கொழும்பு)

நெதர்லாந்துக்கு இருநூறுக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்களை சட்டவிரோதமாக கொண்டுவந்த ஒல்லாந்து நாட்டு போதைவஸ்து கடத்தல் குழுவொன்றுக்கு எதிராக அடுத்தமாதம் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

நெதர்லாந்தின் அரசாங்க வழக்குத் தொடுநர் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஐந்து நபர்களுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படுமென்றும் இவர்கள் கடந்த அக்டோபர் மாதம் கைதுசெய்யப்பட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

ஹெரோயின் போதைவஸ்து கடத்தல் சம்பந்தமான விசாரணையொன்றின்போது இம் மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா ஊடாக நெதர்லாந்துக்கு தமிழர்கள் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்டார்கள் என்றும் நெதர்லாந்தின் எல்லையில் வைத்து இவர்களிடம் கொடுக்கப்பட்ட போலிதஸ்தாவேஜுகள் மீண்டும் வாங்கப்பட்டன என்றும் அந் நெதர்லாந்து அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவிலிருந்து கோதுமை மா இறக்குமதி

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் 58 ஆயிரம் தொன் கோதுமை அமெரிக்காவ்லிருந்து சலுகை அடிப்படையில் இறக்குமதி செய்யப்படவுள்ளது

49 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான கோதுமை நீண்டகால அடிப்படையில் குறைந்த வட்டிக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆனைக்கோட்டை குளத்தில் மூழ்கி இளைஞர் மரணம்

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர்ஆலயத்திற்குஅருகேயுள்ள குளத்தில் குளித்துக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக மரணமடைந்தார்.

நேற்று பிற்பகல் ஒருமணியளவில் நடந்த இச்சம்பவத்தின்போது ஆனைக்கோட்டை மாட்டொழுங்கை கணேசவேல் வீதியைச் சேர்ந்த துரைச்சாமி விமலச்சந்திரன் (வயது 18) என்பவரே மரணமடைந்தவராவார்.

சம்பவதினம் வீட்டிலிருந்து குளித்துவிட்டு வருவதாகக் கூறி புறப்பட்ட இவர் குளத்தில் நீச்சலடித்துக் குளித்துக்கொண்டிருந்தார் எனவும், திடீரென அவர் காணாமல் போகவே அவ்விடத்தில் இருந்தவர்கள் குளத்தில்தேடி மீட்டு யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக தெரிவித்தனர்.

யாழ். போதனா மருத்துவமனையில் மேற்படி இளைஞரை பரிசோதித்தபோது அவர் இறந்துவிட்டமை தெரியவந்தது. (சி) (41)

# யாழ். குடாநாட்டில் பாண் பாவனை அதிகரிப்பு

## செயலக உயரதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பாணின் பாவனை அறுபது சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக யாழ். செயலக உயர் அதிகாரி ஒருவர்தெரிவித்துள்ளார்.


பாணின் விலை குறைப்பைத் தொடர்ந்து பாண் நுகர்வு தொடர்ந்து அதிகரித்து செல்வதாகவும் இந்த நுகர்வு எதிர்வரும் மாதங்களில் மேலும் அதிகரிக்கப்படலாம் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்த அவ் உயர் அதிகாரி இதனை நிவர்த்திசெய்வதில் எதிர்வரும் காலத்தில் செயலகம் பெரிய பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிவரும் எனவும் தெரிவித்தார். முன்னர் 250 தொன் மா, பாண் உற்பத்திக்கு முன்னர் வழங்கப்பட்டதாகவும் தற்போது 400 தொன் மா வழங்க பட்டபோதும் அது தேவையை பூர்த்தி செய்யகூடியதாக அமையவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# கலந்துரையாடல்

வவுனியா கல்வியியற் கல்லூரியில் தற்சமயம் கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவர்கள் அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடுவப்பணியகத்

சமாதான

தானப் பேச்சுக்களுக்கும் புலிகள் எந்த வேளையிலும் தயாராக இருக்கிறார்கள் என்றும் தெளிவாக தலைவர் பிரபாகரன் வலியுறுத்தியிருந்தமையும்தெரிந்ததே.



பூமியில் ஜனனம் 08-11-1976

பூமியில் அடக்கம் 25-12-1994

## செல்வி சா. சவிதா (பவா)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சவிதா சாந்தநிகேதன் 26-12-1994 திங்கட்கிழமை அகாலமரணமானார். இவர் மு சாந்தநிகேதன் புஸ்பராணி தம்பதிகளின் செல்வப் புதல்வியும், சாந்த

# கராச்சியில் உள்ள இந்திய

# தூதரகத்தை மூட முடிவு

(கராச்சி)

பாகிஸ்தான் அரசு கராச்சியிலுள்ள இந்திய தூதரகத்தை மூடிவிட தீர்மானித்துள்ளது.

பாகிஸ்தான் தன்னிச்சையாக எடுத்துள்ள இந்தமுடிவு தனது உள்நாட்டுப் பிரச்சினையை சரிவரக் கையாள முடியாமல் போனதால் பாகிஸ்தானால் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றொரு பரிதாபகர முயற்சி என்றும் இந்தியா கருத்து தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாக பாகிஸ்தான் கூறியிருப்பது வெறும் கற்பனையானது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## யாழ். வன்னி தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப் பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகாமையிலும் உள்ள கருமபீடங்களிலும் ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கருமபீடத்திலும் செய்திகள் ஏற்கப்படுகின்றன.

1. **சலுகை செய்திகள்** முதல் 15 சொற்களுக்கும் ரூபா 15/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2-ம் அறவிடப்படும்

2. **வழமைச் செய்திகள்** முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 5/-ம் அறவிடப்படும்.

3. **வியாபாரச் செய்திகள்** முதல் 10 சொற்களுக்கு ரூபா 200/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/-ம் அறவிடப்படும்.

(மேற் கூறப்பட்ட 1, 2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா100/-ம், 3ற்கு ரூபா 200/-ம் அறவிடப்படும்.)

**அவசர கட்டணம் அறவிடப்படும் மேற்குறிப்பிட்ட செய்திகள் உடன் விநியோகிக்கப்படும்.**

மேலதிக விபரங்களை அந்த அந்த கருமபீடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (சி-10872)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

அமைப்பு நடுவப்பணியகத்திற்கு (குளப்பிட்டிச் சந்தி கொக்குவில்) சமுகம் தருமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## மாணவருக்கு

எனவே அதனை உடனடியாக வழங்குவதன் மூலம் மாணவருக்கு விடுதி வாய்ப்பு அளிக்க முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதே வேளை பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகத்தில் நானூறு மாணவர்களுக்கு விடுதி வசதி அமைக்கும் வகையில் ஒரு கட்டடத்தை வழங்குமாறும் இதன் மூலம் மாணவர் எதிர் நோக்கும் விடுதிப் பிரச்சினையை ஓரளவுக்கு தீர்க்க முடியும் என தான் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது யாழ். பல்கலைக் கழகத்தில் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு மாணவர்கள் கல்வி பயிலுவதாகவும் இவர்களில் 270 பேருக்கு மட்டுமே விடுதி வசதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இது ஏனைய பல்கலைக் கழகங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த வசதியுடைய பல்கலைக் கழகம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(நி, இ)

## ஆசிரியர்

முன்னுரிமை அளித்தல்வேண்டும் என்பதும் இக்குழுவின் கருத்தாகும்.

ஒரு ஆசிரியரின் தொழில் திறனுக்கு சந்தர்ப்பம் அளிக்கும் வகையிலும், தனது சேவை மூலம் திருப்திப்படக்கூடிய வகையிலும் இடமாற்றத்திட்டம் அமுல் செய்யப்படல் வேண்டும் என்பது மற்றொரு கருத்தாகும். மனித வளங்கள் சமனாகப் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்பதும் குழுவின் சிபார்சுகளில் ஒன்றாகும்.

செயலகம் பெரிய பிரச்சினையைஎதிர்கொள்ள வேண்டிய நிலைஏற்படும் என்றும் தெரிவித்தார்.

குறைந்ததுமா தேவையைபூர்த்தி செய்யஒரு தனியானகப்பலை சேவைக்குஅமர்த்த வேண்டியநிலைஏற்படும்என அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

ஒருவாரத்திற்கு 250தொன்

கரன் வலியுறுத்தியிருந்தமையும்தெரிந்ததே,

இந்நிலையில் தமிழ் மக்களது அன்றாட, அத்தியாவசியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தயங்கியே அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை காலவரையறையின்றி ஒத்திவைத்திருப்பதாக அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

# மரண அறிவித்தல்

## மங்கையற்கரசி குமாரசுவாமி

குமரபுரம் கோப்பாய் தெற்கு கொக்குவிலை. பிறப்பிடமாகவும், கோப்பாயை வதிவிடமாக கொண்ட மங்கையற்கரசி நேற்று 28-12-1994 பி. ப. 3 மணியளவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற அம்பலவாணர் குமாரசுவாமியின் அன்பு மனைவியும், திருமதி இராசதேவி நடராசாவின் அன்புச் சகோதரியும், திரு. வி. நடராசாவின் (இளைப்பாறிய ஆசிரியர், புலோலி) மைத்துனியும், திருமதி தி. தனேஸ்வரி (ஆசிரியை, யாழ். கோப்பாய் ம. வி.), குமாரதாசன் (பிரான்ஸ்), பஞ்சதாசன் (லண்டன்), திருமதி கு. கமலேஸ்வரி, திருமதி வி. நாகேஸ்வரி (ஆசிரியை யாழ். முத்துத்தம்பி ம. வி.), திருமதி உ. ஆனந்தீஸ்வரி (பிரான்ஸ்), திருமதி வி. குமரேஸ்வரி, குகதாசன் (சுவிஸ்), கெங்கேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாராவார், டாக்டர் தி. திருக்குமரன் (பாக்கியம் வைத்தியசாலை யாழ்ப்பாணம்), வை. குணாளன் (கிராம உத்தியோகத்தர், விந்தகபுரம் தெல்லிப்பழை), சி. விஜயகாந்தன் (மின்சார பகுதி யாழ் மாநகரசபை), வீ. உலகேஸ்வரன்(பிரான்ஸ்), இ. விஜயநாயகம் (மணி), திருமதி கு. பத்மா (பிரான்ஸ்), திருமதி ப. இரஞ்சிதாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார், திலீப்குமார், சரண்யா, டிலீப்அமுதன், அசோக், அருச்சுனா, அஜந், துமித்தன், திவ்வியா, டிலக்ஸன், கபிலன், சேயோன், கௌதம் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 29-12-1994 நண்பகல் 12 மணியளவில் குமரபுரம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்

தகவல்:

''குமரபுரம்'' பிள்ளைகள், மருமக்கள்,<br>
இருபாலைச் சந்தி, சகோதரி.<br>
கோப்பாய். (10532)

ராணி தம்பதிகளின் செல்வப் புதல்வியும், சாந்தசொரூபி, கவிதா, றூபன், விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29-12-94) காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி சா. புஸ்பராணி (ரதி)<br>
(சி-11044) (தாய்)



## திருமதி பரமேஸ்வரியம்மா மீனாட்சி சுந்தரேஸ்வரக் குருக்கள்

திருமதி பரமேஸ்வரி அம்மா மீனாட்சி சுந்தரேஸ்வரக் குருக்கள் நேற்று முன்தினம் காலை சிவபதமடைந்தார். அன்னார் புங்குடுதீவு கிராஞ்சியம்பதி மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தான ஆதீனகர்த்தா மீனாட்சி சுந்தரேஸ்வரக் குருக்களின் அன்பு மனைவியும், திருமதி லோகேஸ்வரியின் அன்புத் தாயாரும், சிவஸ்ரீ சிறினி. நாகேந்திரக் குருக்களின் (சின்னமணி ஐயா) அன்பு மாமியும், அருணோதய சர்மா, கர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்றுநண்பகலளவில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி இத்தால் வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்:

138, கிராம விஸ்தரிப்பு திட்டம், சிறினி- நாகேந்திரக்<br>
திருநெல்வேலி. குருக்கள்

(சி-11045)